பால் வித்யா

தொகுதி 3 பகுதி 9

செப்டம்பர் 1932

3L
[illegible]211, N30BV
N32·39.
188796

144 Regd. M. No. 2573.



உ

# பால வித்யா.

(மாதப் பத்திரிகை)

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்"

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப் பொருள் காண்பது அறிவு"


| | | |
|---|---|---|
| தொகுதி III | 1932ஹு ஸெப்டம்பர்மீ ஆங்கீரஸஹு புரட்டாசிமீ | பகுதி IX |


No. 7 = OCT 1932
18896
சென்னை-600 008

## ஹாஸ்ய விநோதங்கள்.

—0—

(BY C. V. PICHAI).

உபாத்தியாயர் :—டேய்! ராமமூர்த்தி! இங்கே வாடா; இப்படிகிட்டவில். இந்த (Map) படம் எழுதியது நீதானே?

பையன் :—(நடுக்கத்துடன்) ஆமாம் ஸார்.

உபா :—கலர் கொடுத்தது யார்?

பை :—நான்தான்.

உபா :—(இரண்டு அறைவிட்டு) நான்ஸென்ஸ்! சமுத்திரங்களுக்கு நீலக்கலர் கொடுக்கவேண்டுமென உனக்கு எவ்வளவுநாளாய் சொல்லியிருக்கிறேன். ஏன் சிவப்புவர்ணம் தந்தாய்?

பை :—(அழுதுகொண்டே) அது (Red Sea) செங்கடல் ஸார்.

* * * * *

பாலு :—(பெண்பார்க்கவந்தவர்) என்ன சபேசன்! இவள்தானே உன் சகோதரி ராஜம்? அவளுக்கு என்ன உடம்பு? ஏன் ஒரு மாதிரியாயிருக்கிறாள்?

சபேசன் :—என் சகோதரி ராஜம் இவள்தான். இன்னும் காப்பி சாப்பிடவில்லை. அதனால்தான் ஒருமாதிரியாய் காணப்படுகிறாள்.

* * * * *

**மணியன்:**—என்ன ராதாகிருஷ்ணய்யரே! ரயில் சார்ஜிற்குப் பயந்து கொண்டு என் கல்யாணத்திற்குக்கூட வாராமலிருந்துவிட்டீர்.

**ராதாகி:**—என்ன? கல்யாணமா? யாருக்கு? எப்பொழுது?

**மணியன்:**—உமக்கு கார்டு கிடைக்கவில்லையோ? என் கையால் அட்ரெஸ் எழுதி நானே போஸ்ட் செய்திருக்கிறேன். கார்டு உமக்கு கிடைக்கவில்லையா?

**ராதாகி:**—(கோபத்துடன்) சத்தியமாய் சொல்லுகிறேன். விட்டேன்; விட்டேன். எனக்கு கார்டு (பத்திரிக்கை) கிடைக்கவில்லை. ஒரு வேளை நம்பர் தவறுதலாய் எழுதியிருப்பாய். ... லக்காரத்தெரு என்று எழுதினையோ?

**மணியன்:**—நிச்சயமாய் அப்படியே எழுதினேன்.

**ராதாகி:**—நம்பர் தவறுதலாய் எழுதவில்லை என்று நிச்சயமாய் நீ சொல்லமுடியுமா? அந்த கார்டையே கொண்டுவந்து காட்டினால் பிறகாயினும் ஒப்புக்கொள்ளுவாயா?

* * * *

சினிமாவில் நேற்றிரவு, இரு குடியர்கள் டிக்கட் இல்லாமல் உட்புகுந்தனர். இரண்டாவது கேட் வந்தவுடன் டிக்கட் கேட்கப்பட்டதும், குடியர்கள் டிக்கட் கொடுத்தாய்விட்டதாய் சாதித்தனர். தகவல் மானேஜர்வரையில் எட்டிற்று. அவர்களை கூர்மையாய் கவனித்து வந்த நடராஜன் சாக்ஷியாக அழைக்கப்பட்டான்.

**நடராஜன்:**—(மானேஜரைப் பார்த்து) ஸார்! அவர்கள் மீது குற்றம் இல்லை. போகச்சொல்லுங்கள்.

**மானேஜர்:**—சரி; நீங்களிருவரும் உள்ளேபோங்கள்! (எனக்கூறி அவர்களிருவரும் உள்ளே சென்றதும் கேட்டிலிருப்பவர்களையும் தக்கப்படி எச்சரித்தபிறகு நடராஜனைப் பார்த்து) அவ்விருவரும் டிக்கட் கொடுத்தது உண்மைதானே?

**நடராஜன்:**—டிக்கட் அவர்கள் வாங்கவில்லை என்பது உண்மை. அவர்கள் குடியின் போதையிலிருந்ததால், நல்லபுத்திஸ்வாதீனத்துடன் இல்லாதிருப்பதற்குக் காரணம் 'குடி' என்பதை அறிந்தேன். அதனால்தான் 'அவர்கள்மீது குற்றமில்லை' என்றேன். அவர்களை 'போகச்சொல்லுங்கள்' என்றது வெளியே போகச் சொல்லுங்கள் என்ற அர்த்தத்துடன் சொன்னேன். தாங்கள் தவறுதலாய் உள்ளே போகச்சொல்லிவிட்டீர்கள்.

* * * * *



கீழே இன்னும் என்ன வேலை? மணி 9க்கு மேலாய்விட்டதே." என்று கூறவே, காமாக்ஷி, "தூக்கம் வந்தால் நீங்கள் படுத்துக்கொள்ளுங்கள். எனக்கு கீழே இன்னும் காரியமிருக்கிறது." என்று சொல்லிக்கொண்டே போய்விட்டாள். உடனே சீதாராமன் தன் படுக்கையைப் போட்டுக்கொண்டு, படுத்துக்கொண்டவன் "இதென்ன எனக்கு இப்படித் தூக்கம் வருகிறது." என்று ஆச்சர்யப்பட்டான்.

ஆனால் சீதாராமன் 10மணி சுமாருக்கு தன் நித்திரை கெடுக்கப்பட்டு கண்களைத் திறந்துகொண்டான். அச்சயம், அவ்வறையில் காமாக்ஷி தன் மாமியாருடைய பக்கத்தில் படுத்துக்கொண்டிருந்தாள். கீழே மங்களத்தின் குழந்தை உரத்த குரலில் அழுதுகொண்டிருந்தது. "இந்த சனியன் ஏன் இப்படி அழுகிறது?" என்று சீதாராமன் முணுமுணுத்துவிட்டு, "அடியே! அடியே!" என்று தன் மனைவியை அழைக்க, காமாக்ஷி 'ஏன்?' என்று கேட்டாள். உடனே சீதாராமன்,

"அந்தப் பீடை ஏன் இப்படி கால்மணி நேரமாய்க் கத்துகிறது? போய் பார்த்துவிட்டு வா." என்று கூறவே, காமாக்ஷி,

"எனக்கு உடம்பெல்லாம் வலிக்கிறது. என்னால் இப்பொழுது எழுந்திருக்க முடியாது. வேண்டுமானால் நீங்கள் போய்ப் பாருங்கள்." என்றாள். சீதாராமன்,

"நாள்முழுமையும் மாடுபோல் உழைத்துவிட்டு வந்தவன் இந்த வீட்டில் தூங்கவும் முடியவில்லையே. இப்படி குழந்தையை அழ விட்டுவிட்டு, அந்தப் பீடை (மங்களம்) என்ன பண்ணுகிறது?" என்று உறுமிக்கொண்டே எழுந்து கீழே சென்று பார்த்தபொழுது, மங்களம் படுத்துக்கொண்டிருந்த அறையில் குழந்தைமட்டும் அழுதுகொண்டிருந்ததேயொழிய மங்களம் காணப்படவில்லை. உடனே சீதாராமன், தன் தங்கை ஒருக்கால் கொல்லைப்பக்கம் போயிருப்பாளென்று நினைத்து அங்கு சென்று பார்த்தபொழுது அக்கதவு உட்பக்கம் தாளிடப்பட்டிருப்பதைக் கண்டு, ஒரு

சமயம் வாசற் பக்கம் போயிருப்பாளோவென்று நினைத்து, மறுபடியும் முன்பக்கம் சென்றான். ஆனால் வெளி வாசற் கதவும் உட்பக்கம் தாளிடப்பட்டிருந்ததால், "என்ன ஆச்சர்யம்? அவள் எங்கு போயிருக்கக்கூடும்?" என்று கொஞ்சநேரம் சிந்தித்தவண்ணம் நின்றான்.

நிற்க, இங்கு அவ்வீட்டின் அமைப்பைப்பற்றி கொஞ்சம் சொல்லவேண்டியது அவசியம். அவ் வீட்டில் சீதாராமன் குடியிருந்தானேயொழிய அது அவனுடைய சொந்தமானதல்ல. அவ் வீடும் அதன் பக்கத்திலிருந்த வீடும் ஒருவருக்கே சொந்தமானவையாகையாலும், இன்னும் அந்த சொந்தக்காரர்கள் முதலில் அவ்விரு வீடுகளையும் தங்களுடைய உபயோகத்தில் வைத்துக்கொண்டிருந்ததாலும், ஒரு வீட்டிலிருந்து வெளியே செல்லாமல் மற்றொரு வீட்டிற்குப் போக, அவ்வீடுகளின் இரண்டாங்கட்டில் ஒரு வழியுண்டு. ஆனால் அவ் வீட்டிற்கு சீதாராமன் குடி வந்ததும் நாம் சொன்ன அக் கதவைத் தன்பக்கம் பூட்டிவிட்டான். அவனுடைய பக்கத்து வீட்டில் தற்சமயம் மூர்த்தி அய்யர் என்ற ஒருவர் குடியிருந்தார். அவருக்கு சுமார் 27 வயதிருக்கும். அவரும் நம் சீதாராமனிருந்த அதே ஆபீஸில் 200ரூ. சம்பளத்தில் நல்ல உத்தியோகத்திலிருந்தார். ஆனால், அவருடைய சம்ஸாரம் நாம் சொல்லுவதற்கு முந்திய வருஷம் இறந்துவிட்டாளாகையால், அவ் வீட்டில் அச்சமயம் அவரைத் தவிர வேறு யாருமில்லை. அவர் மகா காமலோலரென்பது சீதாராமனுக்கு நன்றாய்த் தெரியும். அதுவுமன்றி, அன்று காமாக்ஷி பேசியதிலிருந்து தன் தங்கையின் மீதும் அவனுக்கு சந்தேகமேற்பட்டுவிட்டதால், அவன் உள்ளம் பதற துரிதமாய்ச் சென்று அவ்விரு வீடுகளுக்குமிடையிலிருந்த கதவைக் கவனித்ததும் திடுக்கிட்டான். ஏனென்றால் அக் கதவின் சங்கிலி பூட்டில்லாமல் கீழே தொங்கிக்கொண்டிருந்தது.

சீதாராமன் முதலில் தன் கண்களையே நம்பாதவன் போல் காணப்பட்டான். பிறகு அவன் மெல்ல அக் கதவைத் தொடவே அது சப்தமின்றி திறந்துகொண்டது.



உடனே அவன் தன் கையிலிருந்த விளக்கை அணைத்துவிட்டு அக் கதவை நன்றாய்த் திறந்துகொண்டு மூர்த்தி அய்யருடைய வீட்டிற்குள் நுழைந்தான். அதில் இருள் சூழ்ந்துகொண்டிருந்தபோதிலும் அவன் அடிக்கடி அவ் வீட்டிற்குப் போவது வழக்கமுண்டாகையால் சிரமமின்றி சீக்கிரம் அதன் முன்கட்டிற்கு வந்துசேர்ந்தான். அங்கிருந்த ஒரு அறையின் கதவிலிருந்த சந்தின்வழியாய் விளக்கு வெளிச்சம் வந்துகொண்டிருந்தது. அதைக் கண்டதும் சீதாராமன் பூனைபோல் அக் கதவை யணுகி அச் சந்தின்வழியாய் உள்ளே எட்டிப்பார்த்தான். மறுவினாடி ஓங்கி மண்டையிலடிக்கப்பட்டவன்போல் "ஹே தெய்வமே!" என்று வீரிட்டலறியவண்ணம் அப்படியே தரையிலுட்கார்ந்துவிட்டான். அதற்குக் காரணம் அவ்வறையில் போடப்பட்டிருந்த ஒரு படுக்கையில் நாம் சொன்ன மூர்த்தி அய்யரும் அவனுடைய தங்கை மங்களமும் சயனித்துக்கொண்டிருந்தனர்.

## அத்தியாயம் 3.

சீதாராமன் 'ஹே தெய்வமே!' என்று அலறிய சப்தத்தைக் கேட்டதும் உள்ளே படுத்துக்கொண்டிருந்த மூர்த்தி அய்யரும் மங்களமும் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தனர். அதே சமயம் சீதாராமனும் அவ்வறைக்குள் நுழைந்தான். மங்களம் தன் கண்களை நன்றாய்த் திறந்து தன் பக்கத்தில் மூர்த்தி அய்யர் உட்கார்ந்துகொண்டிருப்பதையும் எதிரில் தன் தமயன் நின்றுகொண்டிருப்பதையும் காணவே அவளுடைய முகம் வெளுத்து விகாரமடைந்தது. உடனே திரும்பி ஒருதரம் அவ்வறையை நன்றாய்க் கவனித்தாள். மறுவினாடி அப் படுக்கையிலிருந்து ஒரே தாவலாய்த் தாவி அவ்வறையிலிருந்து வெளியே ஓடினாள்

நிற்க, இதற்குள் சீதாராமனுடைய கண்களில் கோபாக்கினி ஜ்வலித்துக்கொண்டிருந்தது. அவனுடைய கைகால்கள் துடித்துக்கொண்டிருந்தன. மூர்த்தி அய்யர்

'ஹே தெய்வமே!' என்று சீதாராமன் அலறிய சப்தத்தைக் கேட்டதும் முதலில் சலவரமும் குழப்பமுமடைந்த போதிலும் சீக்கிரம் அவைகளை மறைத்துக்கொண்டு மிகவும் தைர்யத்துடன் காணப்பட்டார். அவர், சீதாராமனுடைய கோபாவேசத்தைக் கண்டதும் அதை சிறிதும் லக்ஷியம் செய்யாமல் வியக்கத்தக்க அமைதியுடன்,

"சீதாராமய்யரே! நீர் இப்பொழுது இங்கு ஏதேனும் வம்பு செய்வீராகில் அது உமக்கே அவமானமென்பதை நான் சொல்லவேண்டியதில்லை. இன்னும் உம்முடைய தங்கை என் வீட்டில் என்னறையில் இருந்ததை நீரே பார்த்தீர். ஆகவே, இதில் அவள் எவ்வளவுதூரம் சம்மதித்திருக்க வேண்டுமென்பதை நீரே அறிந்துகொள்ளலாம். நீர் நம்புவீரானால் என்னை இக் கார்யத்தில் ஈடுபடும்படி பலவந்தம் செய்தது உம் தங்கையேயொழிய இதில் நான் கொஞ்சமும் பிரயத்தனப்படவில்லை." என்றார்.

சீதாராமன் பேச முயன்றபொழுது அது சாத்தியமில்லையெனக் கண்டான். அவன் "வாஸ்தவமே. சிறிதும் வெட்கமின்றி தன் குழந்தையையும் லக்ஷியம் செய்யாமல் என் தங்கை வீடுவிட்டு வீடு வந்திருக்கும்பொழுது நான் இவனைத் தண்டிப்பதால் இவன் சொல்லுவதுபோல் நானே இந்த இரஹஸ்யத்தை வெளியிட்டு அவமானத்தை வரவழைத்துக்கொண்டதாகும்." என்று சிந்தித்தவண்ணம் மறுபடியும் தன் தலையைத் தூக்கி மூர்த்தி அய்யரை ஒருதரம் ஏறயிறங்கக் கவனித்தான். பிறகு வாயைத் திறக்காமல் திரும்பி அவ்வறையைவிட்டு வெளியே சென்றான்.

சீதாராமன் மறுபடியும் தன் தங்கையின் அறைக்குச் சென்றபொழுது மங்களம் ஒரு மூலையில் பதுங்கிக்கொண்டிருப்பதைக் கண்டான். அவளுடைய குழந்தை மறுபடியும் தூங்கவாரம்பித்துவிட்டது. உள்ளே நுழைந்த சீதாராமன் கொஞ்சநேரம் தன் தங்கையை உற்றுநோக்கியவண்ணமிருந்தான். அப் பெண் அவனுடைய முகத்தைக் கண்டதும் அதைப் பார்க்கவும் பயந்தவள்போல் தன் கண்



களை இறுக மூடிக்கொண்டான். மறுவினாடி நிற்கவும் சக்தியற்று அப்படியே தொப்பென்று தரையில் விழுந்தாள். ஆனால் சீதாராமன், அடக்க இயலாத கோபத்துடன் அவள்மீது பாய்ந்து அவளுடைய தலைமயிரைப் பிடித்துத் தூக்கி பலாத்காரமாய் நிறுத்தி,

"அடி சண்டாளி! என்ன கார்யம் செய்துவிட்டாய்? இது வெளியாகுமானால் என்னவாகும்? சரி; இப்பொழுது நான் உன்னை அடிப்பதிலும் என் வீட்டிலிருந்து துறத்துவதிலும் பிரயோஜனமில்லையென்பது எனக்கு நன்றாய்த் தெரியும். நீ செய்த கார்யத்திற்கு உன்னை தெய்வம்தான் தண்டிக்கவேண்டும்." என்று கூறிவிட்டு மறுபடியும் அவளுடைய முகத்தையுற்றுநோக்கினான். அவளுடைய கண்கள் இன்னும் மூடியவண்ணமிருந்தன. அச்சமயம் அவளைப் பார்த்தவர்கள் அவள் பேசப் பிரயத்தனப்பட்டாளென்பதையும் ஆனால் பயத்தின்மிகுதியால் பேசமுடியாமல் கஷ்டப்பட்டாளென்பதையும் எளிதில் கண்டுகொள்ளலாம்.

சீதாராமன் மிகவும் சிரமத்துடன் தன் கோபவெறியை அடக்கிக்கொண்டு நாம் சொன்னவிதம் கூறிவிட்டு மேலும் அவ்வறையில் நிற்க இஷ்டப்படாதவன்போல் மடமடவென்று வெளியே சென்றான். ஆனால், அவன் இரண்டடி தூரம் போவதற்குள் அவனுடைய தாயாரும் காமாக்ஷியும் அவ்வறைக்குள் நுழைந்தனர். அவனுடைய தாயார், பிரமையுடன் தன் புதல்வனையும் புதல்வியையும் ஒருதரம் நோக்கிவிட்டு, சீதாராமனைப் பார்த்து, தடுமாற்றத்துடன் 'என்ன சமாசாரம்?' என்று வினவினாள்.

ஆனால் சீதாராமன் உடனே விடையளிக்கவில்லை. அவன் முதலில் தான் கண்ட விஷயத்தை அவர்களிடமும் சொல்ல இஷ்டமில்லாமல் தயங்கினான். ஆனால் பிறகு "இதை நான் இவர்களிடம் ஒளிப்பதில் பிரயோஜனம் என்ன? இது காமாக்ஷிக்கு ஏற்கனவே தெரியும்." என்று தன்னுள் வாதித்துக்கொண்டே தன் தாயாரையும் மனைவியையும் வெளியே அழைத்துச் சென்று விஷயத்தைச் சுருக்கமாய்ச் சொல்லி முடித்தான். அதைக் கேட்டதும் அவ

னுடைய தாயார், திடீரென்று பைத்தியம்பிடித்தவள்போல் ஒரு மூலையில் காணப்பட்ட ஒரு பெருந்தடியை எடுத்துக்கொண்டு மங்களமிருந்த அறைக்குள் ஓடி, சீதாராமன் எவ்வளவோ அடக்கியும் அடங்காமல் மங்களத்தை அத் தடியினால் அடிக்கலானாள். அந்தோ! அக் காக்ஷியை எப்படி வர்ணிப்பது? அக் கிழவி தன் கோபத்தில் தன்னைத்தானே மறந்தவளாய் தான் ஒரு தடியால் ஒரு மனுஷ்ய சரீரத்தை அடிக்கிறோமென்பதையே உணரவில்லைபோலும். ஆனால் மங்களம் வலி பொறுக்கமாட்டாமல் தன் சரீரத்தைத் தீயில் விழுந்த புழுவைப்போல் நெளித்துக்கொண்டாளேயொழிய தன் வாயைத் திறக்கவில்லை. அவள் அவ்விதம் தன் வாயை விட்டு அலறாமலிருப்பதைக் கண்டதும் அக் கிழவி தான் அடிக்கும் அடி அப் பெண்ணின் சரீரத்தில் நன்றாய் உரைக்கவில்லையென்று சந்தேகித்தவள்போல் மேலும் ஆத்திரத்துடன் மங்களத்தின் மண்டையிலும் முகத்திலும் அடிக்கவே, அதன் பலனாயுண்டான பெருங் காயங்களிலிருந்து இரத்தம் பீறிட்டு வெளிக்கிளம்பியது. அதைக் கண்டதும் சீதாராமன் தன் தாயார் அவளைக் கொலை செய்துவிடுவாளென்று பயந்து மறுபடியும் ஓடி அக் கிழவியை வெளியே இழுத்துச் சென்றான். இதற்குள் மங்களம் மூர்ச்சித்துத் தரையில் சவம்போல் கிடந்தாள். அவளுடைய குழந்தை மறுபடியும் விழித்துக்கொண்டு அவளையணுகி அவளுடைய பரிதாபகரமான நிலைமையைக் கண்டு திகிலடைந்து அழவாரம்பித்தது. கடைசியில் சீதாராமன்,

"சரி; நாம் இப்படி நின்றுகொண்டிருப்பதிலென்ன பிரயோஜனம்? போய் படுத்துக்கொள்ளலாம்." என்று கூறிவிட்டு தன் தாயாரை நோக்கி "வேண்டுமானால் நீ கீழே படுத்துக்கொள்," என்று கூறவே, அக் கிழவி,

"நான் மாட்டேன்; இனிமேல் நான் அந்த சண்டாளியின் முகத்தையும் பார்க்கமாட்டேன்." என்று மறுத்துவிட்டாள். பிறகு சீதாராமன் காமாக்ஷி அக் கிழவி இம் மூவரும் மாடிக்குச் சென்றனர்.



நிற்க, இதுவரையில் ஒருவிஷயம் சொல்ல மறந்துவிட்டோம். அதாவது நம் கதை ஆரம்பிப்பதற்கு சுமார் 6 தினங்களுக்குமுன் ஆரம்பித்த மழை அன்று பிற்பகல் 3 மணிவரையில் ஓயாமல் பெய்துகொண்டிருந்தது. அவ்வூரில் எல்லோரும் அதுவரையில் அப்பேர்ப்பட்ட மழை பெய்ததில்லையென்றும் இன்னும் அது பெய்யுமானால் அவ்வூரே நாசமாய்விடுமென்றும் பயந்தனர். அம் மழையின் பலனாய் அவ்வூரில் உண்டான நஷ்டத்திற்கும் உயிர் சேதத்திற்கும் அளவில்லை. ஏழை ஜனங்களுடைய வீடுகள் அநேகமாய் விழுந்துவிட்டதால் அவர்கள் இருக்கவும் இடமின்றி தத்தளித்துக்கொண்டிருந்தனர். மாடுகளும் இன்னும் இதர வாயில்லாப் பிராணிகளும் ஆங்காங்கு இறந்துகிடந்த காக்ஷியையும் அவைகளை ஜனங்கள் இழுத்துச் சென்று அவ்வூர் நதியில் எறிந்த காக்ஷியையும் நாம வர்ணிக்காமலிருப்பதே நலம். ஆகவே நாம் சொன்னதுபோல் அன்று பிற்பகல் மழை நின்றதும் ஜனங்களுக்குண்டான சந்தோஷம் அளவற்றது. ஆனால் அவர்கள் சந்தோஷம் வெகுகாலம் நீடிக்கவில்லை. ஏனெனில் அதே இரவு சுமார் $10\frac{1}{2}$ மணிக்கு மறுபடியும் மழை அதுவரையிலும் இருந்ததைக்காட்டிலும் அதிகமான ஆரவாரத்துடனும் பயங்கரமான இடி மின்னல்களுடனும் கொட்டவாரம்பித்தது. அதைக் கண்ட ஏழை ஜனங்கள் தங்களுடைய முடிவுகாலம் வந்துவிட்டதென்றே நினைத்து பயந்து நடுங்கி கிடைத்த இடங்களில் பதுங்கிக்கொண்டனர். வீதிகளெல்லாம் சிறிதும் ஜனப் புழக்கமின்றி பயங்கரமான இருள் சூழ்ந்து முழங்கால்வரையில் ஜலப் பிரவாகத்துடன் காணப்பட்டன.

ஆகவே சீதாராமன் அவனுடைய தாயார் மனைவி இம் மூவரும் மங்களம் உயிருடனாவது இருக்கிறாளாவென்பதையும் கவனிக்காமல் அப் பெண்மணியை அந்த பரிதாபகரமான நிலைமையில் அவ்வறையில் விட்டுவிட்டு மாடிக்குச் சென்றபொழுது நல்ல மழை பெய்துகொண்டிருந்தது.

மங்களம் மறுபடியும் தன் சுய நினைவடைந்தபொழுது சுமார் 12 மணி இருக்கும். அவ்வறையில் விளக்கு இன்னும்

எறிந்துகொண்டிருந்தது. மங்களம் தன் கண்களைத் திறந்து ஒருதரம் பிரமையுடன் நாலாபக்கங்களையும் கவனித்தாள். பிறகு மெல்ல எழுந்துட்கார்ந்துகொண்டு தன் கரங்களால் தலையைத் தடவியவள் அதிலிருந்த காயங்களிலிருந்து இன்னும் கசிந்துகொண்டிருந்த இரத்தத்தைக் கண்டு திடுக்கிட்டாள். உடனே மிகவும் சிரமப்பட்டு அதுவரையில் நடந்த சம்பவங்களை தன் ஞாபகத்திற்குக் கொண்டுவரப் பிரயத்தனப்படுபவள்போல் காணப்பட்டாள். இவ்விதம் சுமார் கால்மணிநேரம் சிந்தாசாகரத்தில் மூழ்கியவளாய் தரையை உற்றுநோக்கியவண்ணமிருந்தாள். வரவர அவளுடைய நேத்திரங்களிலிருந்து நீர் ஆறாய்ப் பெருகிற்று. கடைசியில் பெருமூச்செறிந்தவண்ணம் தன் தலையைத் திருப்பி தூங்கிக்கொண்டிருந்த தன் குழந்தையைக் கொஞ்சநேரம் கவனித்தவண்ணமிருந்தாள். பிறகு அக் குழந்தையை ஆவலுடனும் ஆத்திரத்துடனும் வாரியெடுத்துக்கொண்டு அதைத் தன்னிடமிருந்து அபஹரித்துப்போக தன்னெதிரில் யமதூதர்கள் நிற்பதைக் கண்டவள்போல் இறுகக் கட்டிக்கொண்டாள். உடனே அக் குழந்தை தன் தூக்கம் கலைந்து தன் தாயாருடைய முகத்தை அனுதாபத்துடன் நோக்கியது. "அம்மா! உன் துக்கத்தின் பலனாய் என்னை அநாதையாய் விட்டுவிட்டுத் தற்கொலை செய்துகொண்டுவிடாதே." என்று கெஞ்சுவதுபோலிருந்தது. உடனே மங்களம் அக் குழந்தையைப் பலதரம் முத்தமிட்டுக்கொண்டு மிகவும் தாழ்ந்த குரலில் "என் கண்மணி! இனி நான் உயிருடனிருப்பது முடியாத காரியம். ஆனால் உன்னை அநாதையாய் விட்டுவிட்டு நான் இறப்பேனென்று நீ பயப்படவேண்டாம். முதலில் உன்னைக் கொன்றுவிட்டு பிறகு என் உயிரை விடுகிறேன். ஏனென்றால் நீயும் உயிருடனிருப்பது பிசகு. இவ்வுலகில் உனக்கு சுகமென்பது இருக்கமுடியாது. வியபசாரியின் பிள்ளை என்ற அவமானத்திற்கும் அதனாலுண்டாகக்கூடிய பலவிதக் கஷ்டங்களுக்கும் நான் உன்னை உள்ளாக்கமாட்டேன். என் செல்வமே! மகா பாபியாகிய என் வயிற்றில் என்னாலேயே



கொல்லப்படவோ பிறந்தாய்? அப்பா! நம்முடைய காலமாய்விட்டது." என்று அக் குழந்தையை மறுபடியும் ஆவலுடன் அணைந்துகொண்டாள். இவ்விதம் மேலும் அரைமணிநேரம் கழிந்தது. இதற்குள் அக் குழந்தை மறுபடியும் தூங்கவாரம்பித்துவிட்டது. உடனே மங்களம் அதைப் படுக்கையில் போட்டுவிட்டு தன் இரு கரங்களையும் கூப்பி, "ஹே தெய்வமே! நான் இதுவரையில் அனுபவித்த கஷ்டங்கள் போதாதென்று என்னை இதற்கும் உள்ளாக்கினீரோ? சரி; நான் வீண் காலதாமதம் செய்வது பிசகு." என்று தீர்மானித்து எழுந்து சப்தம்செய்யாமல் மாடிக்குச் சென்று தன் தயார் தமயன் மன்னி இம்மூவரும் நன்றாய்த் தூங்குவதைக் கண்டதும் மறுபடியும் கீழேவந்து தான் அதுவரையிலிருந்த அறைக்குள் நுழைந்தாள். ஆனால் ஏதோ மறந்துவிட்டவள்போல் உடனே மறுபடியும் வெளியே சென்று அவ் வீட்டின் முன் கூடத்திலிருந்த ஒரு அலமாரியைத் திறந்து அதிலிருந்து ஒருதுண்டு கடிதத்தையும் ஒரு பென்ஸிலையும் எடுத்துக்கொண்டுவந்து கலவரத்துடன் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே கீழ்க்கண்ட கடிதத்தை எழுதினாள்:—

என் தமயன் சீதாராமனுக்கு,

என்னை மன்னிக்குமாறு நான் உன்னை வேண்டிக்கொள்ளுவதில் எள்ளளவும் பிரயோஜனமில்லையென்பது எனக்கு நன்றாய்த் தெரியும். அப்படியே நீ என்னை மன்னித்தபோதிலும் இனி உயிருடனிருக்க எனக்கு இஷ்டமில்லையாகையால் இதோ அரைமணிநேரத்திற்குள் என் குழந்தையும் நானும் இவ்வூர் நதியில் உயிரைவிட நிச்சயித்துவிட்டோம்.

மங்களம்.

இக் கடிதத்தை தன் படுக்கையிலிருந்த ஒரு தலையணையின்மீது வைத்துவிட்டு தன் சரீரத்திலிருந்த நகைகளையெல்லாம் கழட்டி அக் கடிதத்தின்மேல் வைத்தாள். பிறகு தான் அச்சமயம் உடுத்திக்கொண்டிருந்ததைப்போலவேயிருந்த மற்றொரு புடவையால் தன் குழந்தையை நன்றாய்ப்

போர்த்தியெடுத்துக்கொண்டு அவ்வறையிலிருந்த விளக்கை அணைத்துவிட்டு மெல்ல வெளியே சென்றாள்.

நிற்க, மாடியில் படுத்துக்கொண்டிருந்த சீதாராமனைக் கவனிப்போம். அவன் பார்ப்பதற்கு தூங்குவதுபோலிருந்ததேயொழிய வாஸ்தவத்தில் தூங்கவில்லை. ஆனால் அவன் அதுவரையில் நடந்த சம்பவங்களைப்பற்றி சிந்தித்துக்கொண்டிருந்தானாகையால் நாம் சொன்னவிதம் தன் தங்கை மாடிக்கு வந்ததையும் பிறகு வெளியே சென்றதையும் அவன் கவனிக்க நியாயமில்லாமலிருந்தது. அதுவுமன்றி மங்களம் சிறிதும் சப்தமின்றி மிகவும் ஜாக்கிரதையுடன் அக் கார்யங்களைச் செய்தாளென்பதை நாம் சொல்லவேண்டியதில்லை. சீதாராமன் மாடிக்குச் சென்றதுமுதற்கொண்டு மனதில் சிறிதும் நிம்மதியின்றி கீழ்வருமாறு சிந்தித்துக்கொண்டிருந்தான். "என்ன ஆச்சரியம்? நான் இவ்விதம் அவளைக் கையும் களவுமாய் கண்டுபிடித்தும் என் தங்கை இக் கார்யத்தில் சம்மதித்திருப்பாளென்று என்னால் நம்பமுடியவில்லையே. ஒருக்கால் இதில் ஏதேனும் சூதிருக்குமோ? சீச்சீ! அதெப்படி சாத்தியம்? இன்னும் என் தாயார் அவளை அவ்வளவு தூரம் அடித்தும் அவள் தன் வாயைத் திறக்கவில்லையே. அது அவள் குற்றவாளியென்பதைக் காட்டவில்லையோ? ஒருக்கால்—"

அச்சமயம் அவனுடைய மனதில் தோன்றிய எண்ணங்களையெல்லாம் இங்கு விவரித்தெழுதுவது முடியாத கார்யம். அவைகளைச் சுருக்கிச் சொல்லுமிடத்து அவன் எவ்வளவோ முயன்றும் மங்களம் அக் கார்யத்தில் சம்மதித்திருப்பாளென்பதை நம்ப அவன் மனம் இடந்தரவில்லை. ஆனால் தான் அவளையும் மூர்த்தி அய்யரையும் அவ்விதம் ஒரே படுக்கையில கண்டதை நினைக்க ஒன்றும் புரியாமல் மேலும் திகைப்புற்றான்.

வெளியில் வரவர மழை அதிகரித்துக்கொண்டேவந்தது. சுமார் 4 மணிக்கு சமீபத்தில் ஒரு பிரும்மாண்டமான கட்டடம் இடிந்து விழுந்ததாலுண்டான தடாலென்ற



ஒரு சப்தம் அவ்வூர் முழுமையும் கேட்கத்தக்கதாகவும் அதைக் கேட்டதுமே எல்லோரும் நடுங்கத்தக்கதாகவும் உண்டாகவே சீதாராமன் திடுக்கிட்டு எழுந்து தன் படுக்கையிலுட்கார்ந்துகொண்டான். "அடாடா! சப்தத்தைப் பார்த்தால் ஏதோ பெரிய வீடுபோலிருக்கிறது. பாவம்! அதற்குள் மாட்டிக்கொண்டவர்கள் எத்தனை பேரோ? என்ன அநியாய மழை?" என்று தன்னுள் சொல்லிக்கொண்டே மறுபடியும் படுத்துக்கொண்டான். இவ்விதம் வீடுகள் இடிந்துவிழுவது சென்ற ஏழெட்டு தினங்களாக மிகவும் சாதாரணமாய்ப்போய்விட்டதால் ஜனங்கள் வரவர அதைக் கவனிப்பதையே நிறுத்திவிட்டனர். சீதாராமன் இரவு முழுமையும் சிறிதும் நித்திரையின்றி அவஸ்தைப்பட்டுவிட்டு கடைசியில் பொழுது விடிந்ததும் எழுந்து கொஞ்சநேரம் படுக்கையில் சித்தப்பிரமைகொண்டவன் போலுட்கார்ந்துகொண்டிருந்தான். அவனுடைய தாயாரும் காமாக்ஷியும் இன்னும் நித்திரைசெய்துகொண்டிருந்தனர். சீதாராமன் அவர்களையும் எழுப்பிவிட்டு கீழே இறங்கி வாசற்பக்கம் சென்றதும் அக் கதவு திறந்திருப்பதைக் கண்டு திடுக்கிட்டான.

அச்சமயம் மழை நின்றுவிட்டது. தெருவில் ஜனங்கள் கூட்டம் கூட்டமாய் ஆவலுடன் சம்பாஷித்தவண்ணம் போய்க்கொண்டிருந்தனர். அவர்களைக் கண்டதும் சீதாராமன் வியப்புற்று ஊரில் ஏதோ விசேஷம் நடந்திருக்கவேண்டுமென்று நினைத்து, அவர்களில் ஒருவரை யழைத்து "என்ன சமாசாரம்?" என்று விசாரிக்கவே, அம் மற்றொருவர்,

"அடாடா! உமக்கு விஷயம் தெரியாதோ? 7ம் படித்துறையிலிருந்த கல்யாணமண்டபம் விழுந்துவிட்டதாம். அது விழுந்தபொழுது அதில் ஒரு பிராமணப் பெண் ஒரு குழந்தையுடனிருந்தாளென்பது வெளியாகிறது அதைப் பார்க்கப் போகிறோம்." என்று சொல்லிக்கொண்டே போய்விட்டார். இதைக் கேட்டதும் சீதாராமனுக்கு பகீரென்றது. உடனே பிசாசைக் கண்டவன்போல் மறுபடியும் உள்ளே ஓடி தன் தங்கை படுத்துக்கொண்டிருந்த

அறைக்குள் நுழைந்தவன் அது காலியாயிருப்பதைக் கண்டதும் மேலும் திகிலடைந்தான். மறுவினாடி மங்களத்தின் படுக்கையில் நாம் சொன்ன தலையணையின்மீதிருந்த நகைகளையும் கடிதத்தையும் கண்டதும் அவன் தன் தலைமேல் இடிவிழுந்தவன்போல் காணப்பட்டான், பிறகு ஓரே தாவலாய்த் தாவி அடக்கயியலாத அவசரத்துடன் அக் கடிதத்தைப் பிரித்து வாசித்ததும் 'ஐயோ!' என்று வீரிட்டலறிய வண்ணம் சுயனும் தன் சிரசைத் தன் கரங்களால் பற்றிக்கொண்டு அப்படியே தரையிலுட்கார்ந்துவிட்டான். மறுநிமிஷம் அவனுடைய தாயாரும் மனைவியும் அவ்வறைக்குள் நுழைந்தனர். அவ்விருவரும் நடந்த விஷயத்தை யறிந்ததும் வாயைத் திறக்கவும் சக்தியற்றவர்கள்போல் சீதாராமனுடைய முகத்தை யுற்றுநோக்கியவண்ணம் சிலைபோல் நிற்கவே, சீதாராமன், தடுமாற்றத்துடனும் சொல்லொணா பீதியுடனும்,

"அம்மா! அம் மண்டபத்தில் மாட்டிக்கொண்டது மங்களமென்பதில் சந்தேகமில்லை. இது வெளியானாலும் அந்நேரத்தில் அவள் அங்கு போகக் காரணமென்னவென்று எல்லோரும் கண்டிப்பாய்க் கேட்பார்கள். ஹே தெய்வமே! நான் என்ன செய்வேன்?" என்று மடேர் மடேரென்று தன் மண்டையில் அறைந்துகொண்டான். இவ்விதம் சுமார் 5 நிமிஷநேரம் அம் மூவரும் என்ன செய்வதென்று புரியாமல் தவித்தனர். கடைசியில் சீதாராமன், "சரி; நாம் உடனே அங்கு சென்று அது மங்களம் தானாவென்று பார்க்கவேண்டும். இருக்கட்டும். முதலில் நான் போய்ப் பார்க்கிறேன். அவளாயிருந்தால் நீங்களும் வரலாம்." என்று சொல்லிக்கொண்டே பைத்தியம் பிடித்தவன்போல் வெளியே ஓடினான்.

சுமார் கால்மணி நேரத்திற்கெல்லாம் அவன் அப் பாழும் மண்டபமிருந்த இடத்தின் சமீபம் வந்தபொழுது அங்கு ஜனங்கள் ஏராளமாய்க் கூடியிருப்பதைக் கண்டான். பலர் ஓரே குப்பலாய்க் கிடந்த பெரும் கற்களை யெடுத்து சவத்தை எடுக்கப் பிரயத்தனப்பட்டுக்கொண்டிருந்தனர்



அப்பேர்ப்பட்ட சந்தர்ப்பங்களில் ஜனங்கள் பேசக்கூடிய பேச்சையும் அதில் சிலர் அனுபவிக்கக்கூடிய உற்சாகத்தையும் நாம் எடுத்து எழுதவேண்டியதில்லை. ஓரிடத்தில் சிலர் சுமார் 25 வயதுள்ள ஒரு வாலிபனைச் சுற்றி நின்றுகொண்டு அவனைப் பல கேள்விகள் கேட்டுக்கொண்டிருந்தனர். சீதாராமன், அவ் வாலிபனே அம் மண்டபம் விழுந்தபொழுது அதற்குள் ஒரு பெண் தன் குழந்தையுடனிருந்தாளென்ற விஷயத்தை வெளியிட்டானென்பதை அறிந்துகொண்டு, ஆவலுடன் அவனையணுகி அவன் கண்டதை விபரமாய்க் கூறுமாறு வேண்டிக்கொள்ளவே, அவ் வாலிபன் "இதைச் சொல்லிச் சொல்லி என் வாய் வலிக்கிறது." என்று கூறுபவன்போல் ஆயாசத்துடன் ஒருதரம் பெருமூச்செறிந்துவிட்டு,

"ஸ்வாமி! நான் இம் மண்டபத்திற்கு அப்புறமிருக்கும் அக்கிரஹாரத்தில் வசிப்பவன். ஆனால் நேற்று இரவு சுமார் $3\frac{1}{2}$ மணிக்கு எங்கள் தெருவிலும் ஒரு வீடு விழுந்துவிட்டது. அதற்குள் ஒரு 50 வயதுக் கிழவரும் அவருடைய சம்சாரமும் மாட்டிக்கொண்டுவிட்டார்கள். அவர்களுடைய பந்துக்கள்——தெருவிலிருப்பதால் அவ் விஷயத்தை அவர்களுக்குத் தெரிவித்துவரும்படி அங்கிருந்தவர்களில் சிலர் என்னைக் கேட்டுக்கொள்ளவே நான் இவ் வழியாய் வர நேரிட்டது. நான் இம் மண்டபத்தின் சமீபம் வந்தபொழுது அதோ அந்த மரத்தடியில் ஒரு பிராமணப் பெண் இடுப்பில் ஒரு குழந்தையுடன் நிற்பதைக் கண்டேன். நான் வியப்புற்று அவளை யணுகி அவள் அவ்வேளையில் அங்கு நிற்கக் காரணமென்னவென்று கேட்டேன். ஆனால் அப் பெண்மணி விடையளிக்காமல் பயந்து இம் மண்டபத்திற்குள் ஓடினாள். இம் மண்டபம் மிகவும் அபாயகரமான நிலைமையிலிருப்பதை நான் அறிவேனாகையால் அவளை அதற்குள் போகாமலிருக்கும்படி பலதரம் வேண்டிக்கொண்டேன். ஆனால் அவள் அதைச் சிறிதும் கவனியாமல் ஓடி அதற்குள் நுழைந்த மறுவினாடி அது தடாரென்று விழுந்துவிட்டது." என்று சொல்லிமுடித்தான்.

அச்சமயம் சவத்தைத் தேடிக்கொண்டிருந்தவர்களில் ஒருவன் திடீரென்று "இதோ பாருங்கள்! இதோ பாருங்கள்!" என்று கூறவே எல்லோரும் அவ்விடத்தைச் சூழ்ந்துகொண்டனர். அங்கு, பெரும் பல பாராங்கற்களுக்கிடையில் ஒரு பெண்மணியின் தலைமயிர் முடிச்சாய்க் காணப்பட்டது. உடனே எல்லோரும் மேலும் ஊக்கத்துடன் சவத்தின்மேலிருந்த கற்களை யெடுத்ததும், கீழே தென்பட்ட கோரமான காக்ஷியைக்கண்டதும், அதில் சிலர் மூர்ச்சித்து விழுந்தனர். அப் பிரேதத்தின் முகம் ஓரே மாம்ஸ பிண்டமாயிருந்ததுமன்றி, அதன் சரீரமுழுமையும் எலும்புகள் ஒடிந்து வெளியே நீட்டிக்கொண்டிருந்தன. ஆனால், அதன் வலது கை மட்டும் ஒரு சிறு ஆண் குழந்தையை அணைத்தவண்ணமிருந்தது. கஷ்டம்! கஷ்டம்! அக் காக்ஷியை மேலும் வர்ணிக்காமலிருப்பதே நலம். அப் பெண்மணி உடுத்திக்கொண்டிருந்த புடவை முழுமையும் ரத்தத்தில் தோய்ந்து துர்நாற்றத்தை வெளிக்கிளப்பியது.

நிற்க, சவம் கண்டுபிடிக்கப்பட்ட விஷயத்தையறிந்ததும், சீதாராமன் அவ்விடத்தை நோக்கி ஓடினான். ஆனால் ஜனங்கள் ஏற்கனவே அதைச் சுற்றிலும் சிறிதும் இடைவெளி இல்லாமல் சுவர்போல் நின்றுகொண்டிருந்ததால் அவன் தன் அவசரத்தையும் ஆவலையும் அடக்கமாட்டாமல் "ஐயா! கொஞ்சம் வழி விடுங்கள். நானும் பார்க்கிறேன்." என்று உரத்த குரலில் கெஞ்சவே, எல்லோரும் வியப்புற்று திரும்பினார்கள். அவனுடைய நிலைமையைக் கண்டதும், அவன் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தவர்கள் தங்களை யறியாமலே விலகி நிற்கவே, சீதாராமன் பாய்ந்து ஓடி சவங்களைக் கவனித்தான். அவைகளுடைய முகங்கள் அடையாளம் கண்டுபிடிக்கவகையின்றி நசுங்கிக்கொண்டிருந்ததால், அப்படியே அப் பெண்மணியின் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு, அவளுடைய புடைவையில் இரத்தக்கறையில்லாத ஒரு பாகத்தை நன்றாய்ப் பார்த்ததும், "ஐயோ! மங்களம்!" என்று அலறிக்கொண்டே, அச் சவத்தின்மேல் விழுந்து மூர்ச்சையானான்.



அவன் அவ்விதம் மூர்ச்சித்து சவத்தின்மேல் விழுந்ததும் அங்கிருந்த அனைவரும் வியப்பும் திகைப்பும் அடைந்தவர்களாய் அப்படியே ஸ்தம்பித்து நின்றனர். உடனே சிலர் அவனை எடுத்துச் சென்று ஒரு நல்ல இடத்தில் படுக்கவைத்து அவனுக்கு வேண்டிய சிகிச்சைகளைச் செய்யலுற்றனர். அதில் பலருக்கு சீதாராமன் அவனுடைய தாயார் காமாக்ஷி இம்மூவரும் சேர்ந்துகொண்டு மங்களத்தை ஹிம்ஸித்துவந்த விஷயம் தெரியுமாகையால் அவர்கள் கண்டபடி கோபத்துடன் பேசவாரம்பித்தார்கள். "இப் பாபி அந்த முண்டையின் (காமாக்ஷி) போதனையால் இப் பெண்ணை வீட்டிலிருந்து அடித்துத் துறத்தியிருப்பான். இல்லாவிட்டால் இவள் விடியற்காலம் 4 மணிக்கு இங்கு வரக் காரணம் என்ன? இந்த சண்டாளனை விடக்கூடாது. இதை உடனே போலீஸாருக்குத் தெரிவிக்கவேண்டும்." என்று அவர்கள் கோபவேசத்துடன் கலகம் செய்யவே, சீதாராமனுடைய களங்கமற்ற சுபாவத்தையும் அப்படியே அதில் ஏதேனும் விஷமமிருந்தபோதிலும் அதற்குக் காரணம் காமாக்ஷியேயென்பதையும் நன்கறிந்த சில புத்திமான்கள் அப்படி கலகம் செய்தவர்களை சமாதானப்படுத்தி அவர்கள் அவ்விதம் வீண் வம்பு செய்தால் அவர்களுக்கு லாபம் ஒன்றுமில்லையென்று எடுத்துக்காட்டினார்கள். ஆகவே அவ்விரு கக்ஷிகளுக்கும் கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் வாக்குவாதம் நடந்தது.

நிற்க, சவத்தைச் சுற்றி நின்றுகொண்டிருந்த கூட்டத்தின் முன் வரிசையில் சீதாராமனுடைய பக்கத்து வீட்டிலிருந்த மூர்த்தி அய்யரும் நின்றுகொண்டிருந்தார். நாம் சொன்னதுபோல் சீதாராமன் "ஐயோ! மங்களம்!" என்று அலறியதும் அவருடைய முகம் வெளுத்து விகாரமடைந்தது. உடனே தன் பக்கத்திலிருந்தவர்களை அப்படியே தள்ளிக்கொண்டு அவ்விடத்திலிருந்து ஓடினார். கடைசியில் தன் வீட்டிற்குள் நுழைந்ததும் அதன் வெளிவாசற் கதவைத் தாளிடவும் மறந்து தன் அறைக்குள் ஓடி "ஹா தெய்வமே! அப் பெண்ணையும் அவளுடைய குழந்தையை

யும் கொன்ற சண்டாளன் நானே. ஐயோ! நான் என்ன செய்தபோதிலும் இப் பாபம் என்னை விடுமோ?" என்று தன் வாயைவிட்டு அலறியவண்ணம் தன் தலையில் அறைந்துகொண்டார். பிறகு சற்றுநேரத்திற்குமுன் தான் கண்ட சவம் தன்னைத் துரத்திவந்து பிடித்துக்கொண்டதுபோல் "அம்மா! வேண்டாம். அம்மா! வேண்டாம்." என்று கெஞ்சிக்கொண்டே தன் படுக்கையில் விழுந்து முகத்தை மூடிக்கொண்டார். ஆனால் உடனே மறுபடியும் தாவியெழுந்து தன் வேஷ்டியையும் சட்டையையும் சின்னாபின்னமாய்க் கிழித்தெறிந்துவிட்டு கலகலவென்று நகைத்தவண்ணம் பித்தனைப்போல் குதித்தார். நடுவில் தன் கண்களை இறுக மூடிக்கொண்டு 'ஐயோ! வேண்டாம்.' என்று அலறிக்கொண்டே தன் கன்னங்களில் கிள்ளிக்கொண்டார். முடிவில் ஒரு மணி நேரத்திற்கெல்லாம் தன் சுயநினைவற்று அப்படியே தரையில் விழுந்தார். வரலா ஜ்வரம் கண்டு அது அதிகரித்துக்கொண்டேவந்தது.

---

## அத்தியாயம் 4.

அதே தினம் இரவு 8 மணி இருக்கும். அதற்குள் தெய்வானுக்கிரகத்தினால் வீண் குழப்பமின்றி சவங்கள் பிராமண ஜாதி ஆசாரப்படி அடக்கம்செய்யப்பட்டன.

சீதாராமன் தன் அறையில் சித்தப்பிரமைகொண்டவன்போல் உட்கார்ந்துகொண்டிருந்தான். அவன் பக்கத்திலிருந்த நண்பர்களில் சிலர் அவனுக்குத் தேறுதல் சொல்லிக்கொண்டிருந்தனர். ஆனால் அதில் ஒருவருக்கும் முதல் நாள் இரவு அவ் வீட்டில் நடந்த விஷயம் தெரியாது. நடுவில் சீதாராமன், தன் நண்பர்களில் ஒருவரை நோக்கி,

"சபேசா! நீ என் தம்பிக்குத் தந்தி கொடுத்தபொழுது என்ன மணியிருக்கும்? அவன் ஏன் இன்னும் வரவில்லை?" என்று வினவ, அவனுடைய நண்பர்,



"நான் 9 மணிக்குள் கொடுத்துவிட்டேன். அது மத்தியானம் 1 மணிக்கு அவனுக்குக் கிடைத்திருக்கும். பிறகு புறப்பட அவனுக்கு 3 மணிக்குத்தான் வண்டியுண்டு. அது இவ்வூருக்கு 8½ மணிக்கு வருகிறதாகையால் அநேகமாய் இன்னும் அரைமணி நேரத்தில் வந்துவிடுவான்." என்று விடையளித்தார்.

சற்றுநேரத்திற்கெல்லாம் சீதாராமனுடைய நண்பர்கள் அவனிடம் உத்திரவுபெற்றுச் சென்றனர். பிறகு சீதாராமன் கீழே சென்று திண்ணையிலுட்கார்ந்துகொண்டு தன் தம்பியின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்தவண்ணமிருந்தான். அவனுடைய நண்பர் கூறியதுபோலவே நாகராஜன் அரைமணிநேரத்திற்கெல்லாம் வந்துசேர்ந்தான். அவ்வாலிபன் தான் வந்த வண்டியிலிருந்து கீழே இறங்கியதும் தன் தமயன் திண்ணையில் உட்கார்ந்திருப்பதையும் கவனிக்காமல் அவ் வீட்டிற்குள் ஓடினான். இதைக் கண்ட சீதாராமன் எழுந்து தள்ளாடத் தள்ளாட உள்ளே சென்றான்.

அச்சமயம் நாகராஜனுடைய முகம் கோபத்தினால் சிவந்து பார்ப்பதற்கே பயங்கரமாயிருந்தது. அவனுடைய ரௌத்திராகாரத்தைக் கண்டதும் சீதாராமன் நடுங்கினனென்றே சொல்லவேண்டும். ஆனால் தன் தமயனுடைய முகத்தை நன்றாய்க் கவனித்ததும் நாகராஜனுடைய கோபம் கொஞ்சம் தணிந்தது. அவன், தன் தமயன் வாஸ்தவத்தில் எவ்வளவு நற்குணங்கள் வாய்ந்தவனென்பதையும் அப்படியே அவனுடைய சுபாவத்தில் ஏதேனும் மாறுதலிருக்கும்பக்ஷத்தில் அதற்குக் காரணம் காமாக்ஷியேயென்பதையும் நன்கறிந்தவனாகையால் தான் அவன்மீது கோபித்துக்கொள்வது பிசகென்றுணர்ந்து தன் பதட்டத்தையும் சினத்தையும் ஒருவாறு அடக்கிக்கொண்டு மரியாதையுடன்,

"அண்ணா! வழியிலேயே மங்களம் இறந்தவிதமென்னவென்பதைத் தெரிந்துகொண்டேன். ஆனால் விடியற்காலம் 4 மணிக்கு அவள் அப் பாழும் மண்டபத்திற்குப் போகக் காரணமென்னவென்பது எனக்குப் புரியவில்லை." என்றான்.

அச் சமயம் அங்கு நாகராஜனுடைய தாயாரும் காமாக்ஷியும் வந்து சேர்ந்தனர். அவர்களைக் கண்டதும் மறுபடியும் நாகராஜனுடைய கண்களில் கோபாக்கினி ஜ்வலித்தது. அதைக் கண்ட அவனுடைய தாயார் அவனைப் பார்க்கவும் பயந்தவள்போல் தன் முகத்தைத் திருப்பிக்கொண்டாள். ஆனால் காமாக்ஷி அதைச் சிறிதும் லக்ஷியம் செய்யாமல் அவனை உற்றுநோக்கியவண்ணம் நிற்கவே, அதைக் கண்ட சீதாராமன், அவளைப் பார்த்து,

“அடியே! உனக்கு இங்கு வேலையில்லை. போய் உன் காரியத்தைப் பார்.” என்று கூறவே, காமாக்ஷி தடுமாற்றமும் கோபமும் கலந்த குரலில் ‘சரி’ என்று கூறியவண்ணம் போய்விட்டாள்.

எக் காரணத்தாலோ அன்று காலை அச் சவத்தைப் பார்த்ததிலிருந்து சீதாராமனுக்குத் தன் மனைவியிடம் ஒரு வித வெறுப்பும் சந்தேகமும் ஏற்பட்டுவிட்டன. அவன், காமாக்ஷி சென்றதும், திரும்பி தன் தம்பியின் கரங்களைப் பற்றிக்கொண்டு, “நாகராஜா! வா; மாடிக்குப் போவோம்.” என்றான்.

பிறகு சகோதரர்களிருவரும் மாடியிலிருந்த சீதாராமனுடைய அறைக்குச் சென்றதும் சீதாராமன், தாழ்ந்த குரலில்,

“நாகராஜா! எனக்கொன்றும் புரியவில்லையே. ஐயோ! பாபி நான் எல்லோருக்கும் விஷமாய்ப்போய்விட்டேனே.” என்று கூறிவிட்டு சிறு குழந்தைபோல் விசித்து விசித்து அழவாரம்பித்தான்.

இதைக் கண்டதும் நாகராஜனுடைய கண்களிலும் நீர் ததும்பியது. அவன், பிரியத்துடன்,

“அண்ணா! வருந்தவேண்டாம். நான் உன்னிடம் மனஸ்தாபப்படுவதாக நீ நினைக்கவேண்டாம். உன்னுடன் இவ்வளவு காலம் நான் பழகிவிட்டு, நீ உண்மையில் எப்பேர்ப்பட்டவனென்பதை உணரச் சக்தியற்ற அவ்வளவு மடையனல்ல. சரி; அதிருக்கட்டும். நான் நேற்று இங்



கிருந்து போனபிறகு நடந்த விஷயம் என்ன? மங்களம் இரவில் இவ் வீட்டைவிட்டு வெளியே போனதற்கு என்ன காரணம்?” என்று வினவினான்.

சீதாராமன் உடனே விடையளிக்கவில்லை. முதல் நாள் இரவு தான் கண்ட காக்ஷியைத் தன் வாயால் சொல்லவும் இஷ்டப்படாதவன்போல் கொஞ்சநேரம் தயங்கினான். பிறகு,

“நாகராஜா! நேற்று இரவு நடந்த விஷயத்தை நான் சொன்னாலும் நீ நம்பமாட்டாய். ஆனால் இப்பொழுது நான் புளுகமாட்டேனென்பது உனக்கே தெரியும்.” என்று கூறிவிட்டு முதல்நாள் இரவு நடந்த எல்லாவற்றையும் விபரமாய்க் கூறினான்.

மங்களமும் அடுத்த வீட்டு மூர்த்தி அய்யரும் ஒரே படுக்கையில் சயனித்துக்கொண்டிருந்தார்களென்பதைக் கேட்டதும் நாகராஜன் முதலில் திடுக்கிட்டான். ஆனால் மறுவினாடி வீராவேசத்துடன் தன் பற்களை நெறநெறவென்று பயங்கரமாய்க் கடித்தான். மறுபடியும் அவனுடைய முகம் சிவந்தது. பிறகு ஆத்திரத்துடன்,

“அண்ணா! நீ இப்பொழுது புளுகுவாயென்ற சந்தேகம் எனக்கில்லை. ஆனால் மங்களம் இதில் சம்மதித்திருப்பாளென்பதை நான் நம்பவேமாட்டேன். வேண்டுமானால் அவள் அசடென்பதை நான் ஒப்புக்கொள்ளுவேன். அண்ணா! உலகில் இப்பேர்ப்பட்ட அநியாயங்கள் நடக்கக் கூடுமென்று நான் எண்ணவில்லை. இப்பொழுது நம் அருமைத் தங்கை இறந்துவிட்டாளே என்ற துக்கம் எனக்குக் கிஞ்சித்தும் இல்லை. அவள் இவ்விதம் பால்யத்தில் தன் பர்த்தாவை இழந்து தன் குழந்தையுடன் கஷ்டப்படுவதைக்காட்டிலும் இறந்ததே மேல். ஆனால் அவள் இறக்குமுன் தன் கற்பை இழந்தாளென்பதைக் கேட்க என் தேகம் பதருகிறது. மங்களம் சம்மதித்து தன் கற்பை இழந்திருக்கக்கூடுமானால் உலகில் வேறு பதிவிரதை இருக்கமாட்டாளென்பது நிச்சயம். ஆகவே அவளை இக் கெதிக்குள்ளாக்கியது

பிறருடைய சூழ்ச்சியே என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அப் பாபி யாரென்பதை நான் கண்டுபிடிக்காமல் விடேன். சரி; நான் முதலில் சென்று அந்த அயோக்கியசிகாமணி மூர்த்தி அய்யரைப் பார்த்துவிட்டு வருகிறேன்." என்று கூறிக்கொண்டே ஆவேசங்கொண்டவன்போல் தன் இடத்தைவிட்டெழுந்திருக்கவே, சீதாராமன், அவனுடைய கரங்களைப் பற்றிக்கொண்டு,

"நாகராஜா! பதராதே. இதில் ஏதோ சூதிருக்கவேண்டுமென்பதை நானும் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் நாம் இப்பொழுது இதை மறுபடியும் கிளறுவதால் இது எல்லோருக்கும் தெரிந்து நமக்கு அவமானமுண்டாகுமேயொழிய இறந்த நம் தங்கை திரும்பிவரமாட்டாள். ஆகையால் நாம் இதை மறந்துவிடுவதே நலம்." என்றான். ஆனால் நாகராஜன், பிடிவாதத்துடன்,

"அப்படியல்ல. இந்த சந்தேகத்தை நாம் தீர்த்துக் கொள்ளாவிட்டால் நாம் உயிருடன் இருக்கும்வரையில் நம்முடைய மனதில் சமாதானமென்பதே இருக்கமுடியாது. ஆகவே மங்களம் இதில் வாஸ்தவத்தில் சம்மதித்தாளாவென்பதை நாம் கண்டுபிடிக்கவேண்டியது மிகவும் அவசியம். அப்படியே அவள் பிறருடைய சூழ்ச்சியின் பலனாய் அவளறியாமலே கெடுக்கப்பட்டிருந்தபோதிலும் பாதகமில்லை. ஒரு பெண்மணியை ஒரு சண்டாளன் பலாத்காரமாகவோ அல்லது தந்திரத்தின் பலனாகவோ கெடுப்பானாகில், அது அப் பாபி அப் பெண்ணின் கற்பை அழித்ததாகுமேயொழிய அப் பெண்ணின்மேல் சிறிதும் குற்றமில்லை. இது வெளியானபோதிலும் பாதகமில்லை. ஆகவே மங்களம் இறந்துவிட்டாளென்ற காரணத்தால் நாம் இதில் வாஸ்தவமென்னவென்பதைக் கண்டுபிடிக்கப் பிரயத்தனப்படாமல் சும்மாயிருப்பது பிசகு. அதுவுமன்றி நாம் சும்மாயிருக்கும்பக்ஷத்தில் நாமே நம் தங்கையை சந்தேகித்ததாகும்." என்று கூறவே, சீதாராமன்,

"நீ சொல்லுவது வாஸ்தவமே. ஆனால் நாம் இதில் அவசரப்படுவது பிசகு." என்றான். உடனே நாகராஜன்,



"நாம் காலதாமதம் செய்வதும் பிசகு. ஏனென்றால் அப் பாபியை (மூர்த்தி அய்யர்) நாம் உடனே பிடித்துக் கொள்ளவேண்டும். ஒருக்கால் நாம் என்ன செய்வோமோவென்று பயந்து அவன் ஓடிவிடுவான்." என்று கூறிவிட்டு தன் தமயனிடம் விடைபெற்றுக்கொண்டு கீழே சென்றான். அவனுக்கு மூர்த்தி அய்யரை நன்றாய்த் தெரியுமாகையால் துரிதமாய் அவ் வீட்டிற்குச் சென்று பார்த்தபொழுது அது வெளிப்பக்கம் பூட்டப்பட்டிருப்பதைக் கண்டதும் "ஓஹோ! இவன் ஏற்கனவே ஓடிவிட்டான்போலும். ஆனால் இவன் பாதாள லோகத்திற்குச் சென்று ஒளிந்துகொண்டபோதிலும் இவனை விடேன்." என்று தன்னுள் கூறிக்கொண்டே மறுபடியும் தன் தமயனுடைய வீட்டிற்குச் சென்றான்.

பிறகு சகோதரர்களிருவரும் சாப்பிட்டுவிட்டு மாடிக்குச் சென்று படுத்துக்கொண்டார்கள். ஆனால் ஒரு மணி நேரத்திற்கெல்லாம் சீதாராமன், தன் தம்பியை எழுப்பி,

"நாகராஜா! எனக்கு மார்பு ரொம்ப வலிக்கிறது. உடனே போய் டாக்டர் ராமஸ்வாமி அய்யரை அழைத்துக்கொண்டுவா." என்று கூறவே, நாகராஜன் திடுக்கிட்டு சொல்லொணா கவலையுடன் டாக்டர் வீட்டிற்கு ஓடினான்.

சுமார் அரைமணி நேரத்திற்கெல்லாம் வந்த டாக்டர் ராமஸ்வாமி அய்யர் சீதாராமனுடைய ஹிருதயத்தைப் பரீக்ஷித்துப் பார்த்ததும் திடுக்கிட்டார். பிறகு பக்கத்தில் கவலையே வடிவாக நின்றுகொண்டிருந்த நாகராஜனைப் பார்த்து,

"நீ என்னுடன் வா. மருந்து தருகிறேன்." என்று சொல்லவே, இருவரும் வெளியே சென்றனர். பிறகு தன் ஆஸ்பத்திரிக்கு வந்ததும் டாக்டர், நாகராஜனை நோக்கி,

"அப்பா! உன் தமயனுடைய ஹிருதயம் மிகவும் அபாயகரமான நிலைமையிலிருப்பதால் நீங்கள் அவனை மிகவும் ஜாக்கிரதையுடன் பார்த்துக்கொள்ளவேண்டும். அவனுக்கு எவ்வித அதிர்ச்சியும் நேரிடக்கூடாது." என்றார்.

நாகராஜன் மருந்துடன் வீட்டிற்குத் திரும்பிவந்த பொழுது சீதாராமன் பக்கத்தில் காமாக்ஷி உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவள் அவனைப் பார்த்ததும் தன் இடத்தைவிட்டு எழுந்திருக்கவில்லை. ஆகவே நாகராஜன் மருந்தைத் தன் தமயனிடம் வைத்து அதைச் சாப்பிட வேண்டிய வழிகளையும் சொல்லிவிட்டு கீழே போகுந்தருவாயிலிருந்தான். ஆனால் அதைக் கண்ட சீதாராமன், தன் மனைவியை நோக்கி,

"அடியே! நீ கீழே போ." என்று வெறுப்புடன் கூறவே காமாக்ஷியின் முகம் மாறியது. ஒருதரம் தன் புருஷனை ஏற இறங்க கவனித்தாள். பிறகு தான் அச்சமயம் அவனுடன் எதிர்த்துப் பேசுவது பிசகென்றுணர்ந்தவள் போல் வாயைத் திறக்காமல் எழுந்து சென்றாள்.

பிறகு நடந்த விஷயங்களையெல்லாம் இங்கு விவரித்து எழுதவேண்டியது அனாவசியம். மறுநாட் காலை நாகராஜனுடைய மாமனார் கண்யாணராமய்யர் தன் பெண்ணுடனும் மனைவியுடனும் வந்துசேர்ந்தார். சீதாராமன் தன் தம்பியின் வேண்டுகோளுக்கிணங்கி ஒரு வாரம் லீவு எடுத்துக்கொண்டான். வரவர அவனுக்கு காமாக்ஷியிடம் உண்டான வெறுப்பு அதிகரித்துக்கொண்டேவந்தது.

நாகராஜன் வந்த ஐந்தாவது தினம் காலை 10 மணி இருக்கும். நாகராஜன் தன் வீட்டுத் திண்ணையில் சிந்தனையுடன் மேலும் கீழும் உலாவியவண்ணமிருந்தான். அதற்குள் அவன் எவ்வளவோ முயன்றும் பக்கத்து வீட்டு மூர்த்தி அய்யரை அவனால் கண்டுபிடிக்கமுடியவில்லை. ஆகவே அச்சமயம் அவன் அதைப்பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தானென்பதை நாம் சொல்லவேண்டியதில்லை.

சற்றுநேரத்திற்கெல்லாம் நாகராஜன், சுமார் 30 வயதுள்ள ஒருவர் தன்னை நோக்கி வருவதைக் கண்டதும், அவரை உற்றுநோக்கினான். வந்தவர், அவன் சமீபம் வந்ததும் மரியாதையுடன்,



"அப்பா! சீதாராமனுடைய வீடு இதுதானே?" என்று விசாரித்தார். நாகராஜன் 'ஆம்' என்று விடையளித்ததும், அவர்,

"அவர் வீட்டிலிக்கிறாரோ?" என்று வினவ, நாகராஜன்,

"இருக்கிறார். ஆனால் அவருக்கு உடம்பு சரியாயில்லை." என்று விடையளித்தான்.

வந்தவர் :—அடாடா! ஆமாம்; அவருடைய தம்பி சென்னையிலிருந்து வந்திருக்கிறாராமே?

நாகரா:—(வியப்புற்ற ஆவலுடன்) ஏன்? நான்தான் அவருடைய தம்பி. உங்களுக்கு என்னவேண்டும்?

வந்தவர் :—உங்களில் ஒருவரை உடனே அழைத்துவரும்படி என்னை மூர்த்தி அய்யர் அனுப்பினார்.

இதைக் கேட்டதும் நாகராஜனுக்குண்டான ஆச்சரியத்திற்களவில்லை. முதலில் அதைத் தன் தமயனுக்குத் தெரிவிக்கலாமென்று உள்ளே ஓடினான். ஆனால் உடனே தன் தீர்மானத்தை மாற்றிக்கொண்டு மறுபடியும் வெளியேவந்து வந்தவரைப் பார்த்து,

"ஸ்வாமி! வாருங்கள் போவோம்." என்று கூறவே இருவரும் சென்றார்கள். கொஞ்சதூரம் போனதும் நாகராஜன், மற்றொருவரை நோக்கி அடக்கயியலாத ஆவலுடன்,

"ஸ்வாமி! மூர்த்தி அய்யர் இப்பொழுது எங்கிருக்கிறார்?" என்று வினவினான்.

வந்தவர் :—அவர் என் வீட்டிலிருக்கிறார். நான் அவருடைய அம்மாஞ்சி. என்னுடைய வீடு மடவளாகத் தெருவிலிருக்கிறது.

நாகரா :—ஆமாம்; அவர் உம்முடைய வீட்டிலிருக்கக் காரணமென்ன?

வந்தவர் :—அவருக்கு 5, 6 தினங்களாக உடம்பு சரியாயில்லை. அவர் பிழைத்தது புனர்ஜன்மமென்று

சொல்லவேண்டும். நான் போன வியாழக்கிழமை காலை 10 மணிக்கு அவருடைய வீட்டிற்குப் போனபொழுது அவர் தன் சுயநினைவற்று தரையில் படுத்துக்கொண்டிருந்தார். அப்பொழுது நல்ல ஜ்வரமும் அடித்துக்கொண்டிருந்தது. அவர் அவ் வீட்டில் தனியாய் இருக்கிறாரென்பது உமக்குத் தெரிந்திருக்கலாம். ஆகையால் அந்த நிலைமையில் அவர் அங்கிருப்பது பிசகென்று நினைத்து நான் உடனே என் வீட்டிற்கு எடுத்துச் சென்றேன். வரவர ஜ்வரத்துடன் பேத்தலும் ஆரம்பித்துவிட்டது. உடனே டாக்டர் ராமஸ்வாமி அய்யரை அழைத்துக்கொண்டுபோய்க் காண்பித்தேன். ராமஸ்வாமி அய்யர் அவருடைய சித்தமே கலங்கியிருப்பதாகவும் அவர் நாலைந்து தினங்கள் ஒருவருடனும் பேசக்கூடாதென்றும் கூறினார். இன்னும் அவர் மயக்க மருந்தும் கொடுத்திருக்கிறாரென்று நினைக்கிறேன். ஏனென்றால் நேற்று இரவுவரையில் அவர் (மூர்த்தி அய்யர்) சதா மயங்கித் தூங்கியவண்ணமிருந்தார். பிறகு இன்று காலையில்தான் கொஞ்சம் நல்ல நினைவுடன் பேசினார். உடனே உங்களுடைய தமயனைப்பற்றி விசாரித்தார். அச்சமயம் அங்கு வந்த டாக்டர் ராமஸ்வாமி அய்யர் உங்கள் வீட்டில் சில தினங்களுக்கு முன் நடந்த விஷயத்தையெல்லாம் கூறியதுமன்றி நீங்களும் சென்னையிலிருந்து வந்திருப்பதாகக் கூறினார். அவர் போனதும் மூர்த்தி அய்யர் என்னை உடனே சென்று உங்களில் ஒருவரை அழைத்துவரும்படி கேட்டுக்கொண்டார்.

வரவர நாகராஜனுடைய வியப்பும் திகைப்பும் அதிகரித்துக்கொண்டேவந்தன. கடைசியில் அவ்விருவரும் அச்சமயம் மூர்த்தி அய்யர் இருந்த வீட்டிற்குச் சென்றபொழுது மூர்த்தி அய்யர் மாடியில் அவர்களை மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்தவண்ணம் ஒரு கட்டிலில் உட்கார்ந்துகொண்டிருந்தார். அவர் நாகராஜனைப் பார்த்ததும் மரியாதையுடன் நமஸ்கரித்துவிட்டு அவனை உற்றுநோக்கியது



“ஐயா! தயவுசெய்து இவர் (தன் அம்மாஞ்சி) இவ்விடத்தைவிட்டுப் போகும்வரையில் பதரவேண்டாம்.” என்று கெஞ்சுவதுபோலிருந்தது. அதை அறிந்த நாகராஜன் வாயைத் திறக்காமல் நின்றான். மூர்த்தி அய்யருடைய முகம் வெளுத்து வாடி ரோமமடர்ந்து பார்ப்பதற்கே விகாரமாயிருந்தது. அதுவுமன்றி அச்சமயம் அதில் பயமும் தடுமாற்றமும் புலப்பட்டனவேயொழிய அன்று இரவு சீதாராமனுடன் பேசியபொழுதிருந்த தைரியமும் திமிரும் சிறிதும் காணப்படவில்லை. அவர், திரும்பி தன் அம்மாஞ்சியைப் பார்த்து,

“ராமனாதா! நீ சாப்பிட்டுவிட்டு ஆபீசுக்குப் போ.” என்று கூறவே, நாகராஜனை அழைத்துவந்தவர் கீழே சென்றார்.

அவர் போனதும் மூர்த்தி அய்யர் சிரமத்துடன் எழுந்து தள்ளாடித் தள்ளாடிச் சென்று, தாங்கள் பேசக்கூடியதை வெளியிலிருந்து எவரும் உற்றுக்கேட்க முடியாதென்பதை நிச்சயம்செய்துகொண்டு அவ்வறையின் கதவை உட்பக்கம் தாளிட்டுவிட்டார். பிறகு ஸ்தம்பித்து அவரை உற்றுநோக்கியவண்ணம் நின்றுகொண்டிருந்த நம் நாகராஜனை யணுகி மடேரென்று அவனுடைய பாதங்களில் விழுந்து அவைகளை நடுங்கும் தன் கரங்களால் பற்றிக்கொண்டு கல்லும் கரையத்தக்க குரலில்,

“அப்பா! நான் பரம சண்டாளன். அநியாயமாய் ஒரு பெண்ணையும் அவளுடைய குழந்தையையும் கொன்றுவிட்டேன். நான் சொல்லப்போவதை தயவுசெய்து கேட்டுவிட்டு பிறகு உன் இஷ்டப்படி செய். ஆனால் நீ என்னைக் கொலைசெய்தபோதிலும் பாபமில்லை.” என்று கதறினார்.

இதைக் கண்டதும் நாகராஜன் மேலும் திகைப்புற்று உடனே பேசச் சக்தியின்றி மேலும் கொஞ்சநேரம் மௌனமாய் நின்றான். மூர்த்தி அய்யருடைய பரிதாபகரமான நிலைமையைக் கண்டதும் அவனுடைய மனம் இளகியது. அவன், மூர்த்தி அய்யரை மெல்ல எழுப்பி அவருடைய

படுக்கையில் ஜாக்கிரதையுடன் உட்காரவைத்துத் தானும் பக்கத்திலமர்ந்துகொண்டு மரியாதையுடன்,

"ஸ்வாமி! நீர் பயப்படவேண்டாம். சொல்லவேண்டியதை சீக்கிரம் சொல்லும்." என்றான்.

உடனே, மூர்த்தி அய்யர், அன்று இரவு நடந்த விஷயம் முழுமையும் நாகராஜனுக்குத் தெரியுமென்பதைக் கேட்டறிந்துகொண்டு,

"அப்பா! நான் சொல்லுவதை நீ நம்பமாட்டாயென்பது நிச்சயம். ஆனாலும் நான் தெய்வத்தின்மேல் ஆணையாய்ச் சொல்லுகிறேன். உன்னுடைய தங்கை மகா பதிவிருதை. அவள் தன் கற்பை இழக்கவில்லை—" என்று அவர் மேலே பேசுமுன், நாகராஜய்யர்,

"என்ன சொன்னீர்? என் தங்கை தன் கற்பை இழக்கவில்லையா? ஸ்வாமி! நீர் சொல்லுவது நம்பத்தக்கதாயில்லையே. மூர்த்தி அய்யரே! நீர் சொல்வது வாஸ்தவமாயிருக்கும்பக்ஷத்தில், உம்மை மன்னிப்பதுமன்றி, உமக்குப் பாதபூஜையும் செய்வேன். தயவுசெய்து நடந்த விஷயத்தை விபரமாய்க் கூறும்." என்று மன்றாடினான். மூர்த்தி அய்யர்,

"அப்பா! உன் தங்கை தன் கற்பை இழக்கவில்லை என்பதை அறிந்ததும் நீ சந்தோஷப்படலாம். ஆனால் நான் சொல்லக்கூடிய எல்லாவற்றையும் நீ கேட்டதும் வருத்தமலிருக்கமுடியாது. இருந்தபோதிலும் அதற்காக நான் உள்ளதை ஒளிப்பது சரியல்ல. அப்பா! உன்னுடைய தங்கை தினந்தோறும் சிறிதும் இரக்கமின்றி அடிக்கப்பட்டதையும் அவமானப்படுத்தப்பட்டதையும் நான் அறிவேன். இன்னும் அவள் அப்படிக் கஷ்டப்பட்டதற்குக் காரணம் உன் தமயன் சம்ஸாரம் காமாக்ஷியே என்பதும் எனக்குந் தெரியும். அப்பா! அன்று இரவு உன் தமயன் என்னையும் உன் தங்கையையும் ஒரேபடுக்கையில் கண்டதற்குங் காமாக்ஷியின் சூழ்ச்சியே காரணம்." என்றார்.



இதைக் கேட்டதும், நாகராஜன், தன் குடும்பத்தின் பெயரே காமாக்ஷியால் கெட்டுவிட்டதை உணர்ந்து, "ஹா!" என்று பெருமூச்செறிந்தவண்ணம், கைகால்கள் சோர்வுற்று, அப்படியே பக்கத்திலிருந்த சுவற்றில் சாய்ந்துவிட்டான். ஆனாலும், மூர்த்தி அய்யரை நோக்கி தடுமாற்றத்துடன்,

"ஸ்வாமி! மேலே சொல்லும்." என்று கெஞ்சினான். உடனே மூர்த்திஅய்யர்,

"நாகராஜா! நான் பரம அயோக்கியனென்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் இதுவரையில் நான் குலஸ்திரீகளைத் தொட்டவனுமல்ல. அதிருக்கட்டும்; நான் அவ் வீட்டிற்குக் குடி வந்து 6 மாதகாலமிருக்குமென்பது உனக்கே தெரியும். நான் அவ் வீட்டிற்கு வந்ததுமுதற்கொண்டு, உன் தமயன் மனைவி காமாக்ஷி என்னை மயக்கித் தன் வலையில் சிக்கவைக்க முயன்றுவந்தாள். தயவுசெய்து பதாதே. ஆனால் இதுவரையில் அவளும் தன் கற்பை இழக்கவில்லை. அவள் என்னை மயக்கவாரம்பித்ததும் நான் முதலில் பயந்து அதற்கிடங்கொடுக்கவில்லை. ஆனால் வரவர அவளுடைய அழகையும் தளுக்கையும் கண்டு மயங்கினேன். சென்ற சுமார் ஒருமாதகாலமாக, நாங்களிருவரும் அநேகமாய் ஒவ்வொருநாளும் அஸ்தமித்ததும் கொல்லைப் பக்கத்தில் சந்தித்துக் கொஞ்சநேரம் இரஹஸ்யமாய்ப் பேசுவது வழக்கம். ஆனால் ஒவ்வொரு சமயமும், நான் எவ்வளவோ முயன்றும், காமாக்ஷி ஏதாவது சாக்குச் சொல்லி நான் அவளைத் தொடவும் சம்மதிப்பதில்லை. கடைசியில், உன் தமயன் என்னையும் உன் தங்கையையும் அவ்விதம் கண்டதினம் மாலை சுமார் 6½ மணிக்கு நாங்கள் வழக்கம்போல் சந்தித்தபொழுது, காமாக்ஷி என்னிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்து, அதை உடனே வாசித்துப்பார்த்துவிட்டு, மறுபடியும் அரைமணி நேரத்திற்கெல்லாம் அங்கு வந்து நான் அதற்கு விடையளிக்கவேண்டுமென்று கூறினாள். அப்பா! நீ அவளுடைய் கையெழுத்தைப் பார்த்திருப்பாயென்று நம்புகிறேன். இதோ அக் கடிதத்தை

188796



நீயே வாசித்துப்பார்." என்று கூறிக்கொண்டே, தன் படுக்கையிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து, நாகராஜனிடம் கொடுத்தார்.

இதற்குள் நாகராஜனுடைய கரங்கள் கோபாவேசத்தினால் துடித்துக்கொண்டிருந்தன. அவன் அக் கடிதத்தை வாங்கிக் கீழ்க்கண்டவாறு வாசித்தான் :—

"நீங்கள் என்னை எவ்வளவுதூரம் காதலிக்கிறீர்களென்பது எனக்குத் தெரியும். ஆனால் என்னைப்போன்ற பெண்களை அநுபவிப்பது லேசான காரியமல்ல. நீங்கள் வாஸ்தவத்தில் என்னை அநுபவிக்கவேண்டுமானால் நான் சொல்லும் காரியத்திற்கு சம்மதிக்கவேண்டும். நீங்கள் சம்மதித்து இக் காரியத்தில் நாம் ஜயம்பெறுவோமானால், என்னைப்போன்ற பெண்களிடமிருந்து புருஷர்கள் எப்பேர்ப்பட்ட சுகங்களநுபவிக்கலாமென்பதை நீங்கள் நாளை தினமே தெரிந்துகொள்ளுவீர்கள். இவ் விஷயத்தில் எனக்கு உதவிபுரிய நீங்கள் மறுக்கமாட்டீர்களென்பது நிச்சயம்.

என் நாத்தனார் (மங்களம்) என் வீட்டிலிருக்கும் வரையில் நாம் ஒன்றும் செய்யமுடியாது. ஆகவே, அவளை என் வீட்டிலிருந்து துரத்தவேண்டியது அவசியம். ஆனால் அவள் சோரம்போகிறாளென்று ஏற்பட்டாலொழிய அவளை என் வீட்டிலிருந்து துரத்தமுடியாது. ஆகையால் இன்று இரவு என் புருஷன், மாமியார், மங்களம் இம் மூவரையும், என்னிடமிருக்கும் ஒரு மயக்க மருந்தை உபயோகப்படுத்தி, சுமார் ஒருமணிநேரம் மயக்கிவிடுகிறேன். நீங்கள் இவ்விரு வீடுகளுக்குமிடையில் இரண்டாங்கட்டிலிருக்கும் கதவை உங்கள்பக்கம் 9மணிக்குள் திறந்து வைக்கவும். பாக்கிக் காரியங்களை நான் பார்த்துக்கொள்ளுகிறேன்.

உங்களுக்கு இதில் இஷ்டமுண்டா இல்லையா என்பதை 7½மணிக்கு கொல்லைப்பக்கம் வந்து என்னிடம் சொல்லவும். அப்பொழுது இக் கடிதத்தையும் நீங்கள் என்னிடம் திருப்பிக்கொடுத்துவிடவேண்டும்.

---



## அத்தியாயம் 5.

இதற்கு முந்திய அத்தியாயத்தினிறுதியில் கூறப்பட்ட அக் கடிதத்தை வாசித்ததும் நாகராஜன் திகைப்புற்று சுமார் ஐந்துநிமிஷநேரம் தரையை உற்றுநோக்கியவண்ணமிருந்தான். முதலில், பெண்ணாய்ப் பிறந்த ஒருவளுக்கு அவ்வளவு தைரியமிருக்கமுடியுமாவென்று அவன் ஆச்சரியப்பட்டதுண்டு. ஆனால் காமாக்ஷியின் குணங்களை அவன் நன்கறிந்தவனானதால், அவள் எதையும் செய்யத் துணிவாளென்று பிறகு நம்பினான். இருந்தபோதிலும் மகா தந்திரசாலியாகிய அவள் அவ்விதம் தன் சூழ்ச்சியை கடிதத்தில் எழுதியதுமன்றி, அக் கடிதத்தை மூர்த்தி அய்யரிடமிருந்து திரும்பி வாங்கிக்கொள்ளாமல் அவரிடம் மாட்டிக்கொண்டதை நினைத்ததும், அவன், மூர்த்தி அய்யரை நோக்கி,

"ஸ்வாமி! அன்று இரவு 7½மணிக்கு நீர் மறுபடியும் அவளைக் கண்டு பேசினீரா?" என்று வினவினான்.

மூர்த்தி :—பேசினேன். நான் முதலில் அக் காரியத்திற்கிணங்க கண்டிப்பாய் மறுத்துவிட்டேன். ஆனால் நாங்கள் பிறகு அநுபவிக்கக்கூடிய சுகங்களை அவள் மறுபடியும் எடுத்துச் சொல்லவே, நான் மதியிழந்தேன்.

நாக :—சரி. அச்சமயம் நீர் இக் கடிதத்தை ஏன் அவளிடம் திருப்பிக் கொடுக்கவில்லை?

மூர்த்தி :—அப்பா! நான் அவளுடைய அழகைக் கண்டு மயங்கினேனென்பது வாஸ்தவமே. ஆனால் அவளை முழுமையும் நம்ப எனக்கிஷ்டமில்லை. ஒருக்கால் தன் சூழ்ச்சியின்பலனாய் தன் நாத்தனார் அவ்வீட்டிலிருந்து துரத்தப்பட்டதும் அவள் என்னை ஏமாற்றிவிடுவாளென்று நான் சந்தேகித்தேன். ஆகவே, அவளை பயமுறுத்த என்னிடம் ஏதேனும் ஆதாரம் வேண்டுமென்று நினைத்து, இக் கடிதத்தைப்போலவே மற்

றென்று எழுதி, அதை அவள் கேட்டதும் கொடுத்து விட்டேன். நான் அப்படி தந்திரம் செய்வேனென்று அவள் சந்தேகிக்கவில்லை.

நாக:—ஸ்வாமி! இக் கடிதத்திலிருந்தும் நீர் சொல்வதிலிருந்தும் இதில் என் தங்கை சம்மதிக்கவில்லை என்பது நிச்சயம். ஆனால் அவள் தன் சுயநினைவற்று உம்முடைய அறையிலிருந்தபொழுது நீர் அவளைக் கெடுக்கவில்லையென்பது நிச்சயமா?

மூர்த்தி:—அப்பா! இப்பொழுது இவ்விதம் நான் உன்னை வரவழைத்து என் குற்றத்தை ஒப்புக்கொண்டதற்குக் காரணம் இதனால் எனக்கு வரக்கூடிய தண்டனைக்குப் பயந்தல்லவென்பது உனக்கே தெரியும். அப்படியே நீங்கள் என்னைத் தண்டனைக்குள்ளாக்க நிச்சயித்து விட்டால்; நான் உன் தங்கையை அவ்விதம் என் அறைக்கு எடுத்துச் சென்றதொன்றே போதும். அவளை நான் கெடுத்திருக்கவேண்டியது அவசியமில்லை. அதுவுமன்றி, நீங்கள் என்னைத் தண்டனைக்குள்ளாக்கமாட்டீர்களென்பதை நான் அறிவேன். ஏனெனில், தண்டனைக்குள்ளாக்கவேண்டுமானால் நீங்கள் காமாக்ஷி செய்த காரியங்களையும் வெளியிடவேண்டும். அதனால் உங்களுடைய குடும்பத்திற்கு வரக்கூடிய அவமானம் லேசானதல்ல. எல்லாம்போக, பதிவிருதைகள் ஒருவனிடம் தப்பவகையின்றி மாட்டிக்கொண்டபோதிலும், அவர்களைக் கெடுப்பது முடியாத காரியம். இதை நான் அன்று இரவு கண்டுகொண்டேன். அப்பா! உன் தங்கை என் அறையில் அவ்விதம் தன் சுயநினைவற்றுக் கிடந்தபொழுது, அவளை அநுபவிக்க வேண்டுமென்ற ஆசை என் மனதில் தோன்றியது வாஸ்தவமே. ஆனால் அவளுடைய களங்கமற்ற முகத்தையும் பரிதாபகரமான நிலைமையையும் கண்டதும் அவளைத் தொடவும் என் மனம் இடந்தரவில்லை. இன்னும் நான் கெட்ட எண்ணத்துடன் அவளை சமீபித்தபொழுது, அவளுடைய சரீரத்திலிருந்து அக்கினி



ஜ்வாலை வெளிக்கிளம்பி என்னை எரிப்பதுபோலிருந்தது. அப்பா! மறுநாட்காலை அப் பாழும் மண்டபத்தில் மாட்டிக்கொண்டு இறந்தது உன் தங்கையென்பதை அறிந்ததுமுதற்கொண்டு, நான் படும் கஷ்டம் தெய்வத்துக்குத்தான் தெரியும். ஒருக்கால் என் குற்றத்தை உங்களிடம் ஒப்புக்கொண்டால் என் மனதில் கொஞ்சம் சமாதானம் ஏற்படலாமென்று நம்பி, இவ்விதம் உன்னை வரவழைத்து, இவ் விஷயத்தைச் சொன்னேன். உன் தங்கையையும் அவளுடைய குழந்தையையும் கொன்ற சண்டாளன் நானே என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். இப்பொழுது நீ உன் இஷ்டப்படி செய்யலாம். நான் என்னை மன்னிக்கும்படி உன்னைக் கேட்டுக்கொள்ளவில்லை. நீ தயவு செய்து உன் தங்கை சுத்தமென்பதை நம்பினால் போதும்.” என்று கெஞ்சிக்கொண்டே மறுபடியும் நாகராஜனுடைய பாதங்களைப் பற்றிக்கொண்டார்.

நாகராஜன், சுமார் கால்மணிநேரம்வரையில் சிந்தாசாகரத்திலாழ்ந்தவனாய், மூர்த்தி அய்யருடைய முகத்தை உற்றுநோக்கியவண்ணமிருந்தான். பிறகு தன் பாதங்களைப் பற்றிக்கொண்டிருந்த அவருடைய கரங்களைத் தன் கைகளில் எடுத்துக்கொண்டு,

“ஸ்வாமி! நீர் சொன்னது முழுமையும் உண்மையென்று நான் நம்புகிறேன். இன்னும் நானும் என் தமயனும் உம்மை மன்னிக்கத்தயார். ஆனால் இப்பொழுது நான் கேட்டுக்கொள்ளவேண்டியது ஒன்று உண்டு. தற்சமயம் என் தமயன் ஹிருதய சம்பந்தமான ஒரு வியாதியினால் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறான். டாக்டர் ராமஸ்வாமி அய்யர் அவனுக்கு எவ்வித அதிர்ச்சி ஏற்பட்டாலும் அது அவனுடைய உயிருக்கே ஆபத்தாய் முடியுமென்று அபிப்பிராயப்படுவதால், காமாக்ஷி செய்த காரியத்தை அவன் அறிவானாகில், அதே நிமிஷம் தன் உயிரை இழப்பானென்பது நிச்சயம். ஆகவே, நீர் இதை அவனிடம் என் உத்தர

வின்றி சொல்லக்கூடாது. அதுவுமன்றி, நீர் இதை என்னிடம் ஒப்புக்கொண்டுவிட்டீரென்பதை காமாக்ஷியும் தெரிந்துகொள்ளாமலிருப்பதே நலம். ஆனால் காமாக்ஷி உம்மை மறுபடியும் தன் வலையில் சிக்கவைக்க முயலுவாளாகில், அவளுக்கு புத்திமதி சொல்லி, அவளைத் திருத்துவது உம்முடைய கடமை. ஐயா! காமாக்ஷியைப்போல் பெண்கள் தவறான மார்க்கத்தில் செல்லும்பொழுது, நம்மைப்போல் நன்றாய்ப் படித்த ஆண்கள் அவர்களைக் காப்பாற்றுவது அழகேயொழிய அவர்களுடைய துர்கிருத்தியங்களுக்கு நாமே சாதகமாயிருப்பது மிகவும் பிசகென்பதை இனியாகிலும் அறிந்துகொள்ளும்படி உம்மை மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்." என்று கூறவே, மூர்த்தி அய்யர், தன் நன்றி அறிவையும் தனக்கு நாகராஜனிடமுள்ள மதிப்பையும் தன் கண்களாலும் குரலாலும் வெளியிட்டு,

"அப்பா! உன்னுடைய உதாரகுணத்தின் பலனாய் நான் கூடியசீக்கிரம் திருந்திவிடுவேனென்பது நிச்சயம். என்னால்—" என்று அதுவரையில் பேசிய சிரமத்தினால் மேலும் பேசச் சக்தியற்று, களைப்புடன் அப்படியே தன் படுக்கையில் சாய்ந்துவிட்டார். உடனே, நாகராஜன் பிரியத்துடன் அவரை சரியாய்ப் படுக்கவைத்துவிட்டு, அவரை அந்த நிலைமையில் தனிமையில் விட்டுப்போக மனமில்லாமல் தயங்கியவண்ணம் நிற்கவே, மூர்த்தி அய்யர்,

"நீ வீட்டிற்குப் போகலாம். நீ என்னை மன்னித்துவிட்டதால் என் வியாதி சீக்கிரம் நீங்கிவிடுமென்பது நிச்சயம். உன் தமயனும் என்னை மன்னிப்பானென்று நம்புகிறேன்." என்றார்.

நாகராஜன் அவருக்கு மறுபடியும் தைரியம் சொல்லிவிட்டு, தான் மேலும் அங்கு தாமதிக்கவேண்டியது அவசியமில்லை என்பதை மறுபடியும் கேட்டறிந்துகொண்டு, தன் வீட்டிற்குச் சென்றான்.

மங்களம் தன் கற்பை இழக்கவில்லை என்பதை அறிந்ததும் நாகராஜனுக்குண்டான சந்தோஷத்திற்களவில்லை.



ஆனால் காமாக்ஷி செய்த அக்கிரமத்தை நினைத்ததும், அவனுடைய தேகம் மறுபடியும் பதரவாரம்பித்தது. "ஹே தெய்வமே! இச் சண்டாளி இன்னும் என்னென்ன செய்வாளோ தெரியவில்லையே. இவள் என் தமயனையும் கொல்லமாட்டாளென்பது என்ன நிச்சயம்? ஹே அநாதரக்ஷகா! என் தமயனை இப் பாபியிடமிருந்து காப்பாற்றுவது உன்னுடைய கடமை. அந்தோ! இவள் வாஸ்தவத்தில் எப்பேர்ப்பட்டவளென்பதை என் தமயனுக்கு எடுத்துக்காட்டி, அவனைத் தன்னைத்தானே காப்பாற்றிக்கொள்ளும்படி சொல்லவும் வழியில்லையே. இருக்கட்டும்; நான் வீணாய்க் கவலைப்படுவதில் என்ன பிரயோஜனம்?" என்று தன்னுள் புலம்பிக்கொண்டே துரிதமாய் தன் வீட்டை நோக்கி நடந்தான். இன்னும் பெண்கள் தங்களுடைய அக்கிரமங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அதற்காக கண்டபடி தண்டிக்கப்படும்பக்ஷத்தில், அவர்கள் தங்களுக்கு அதுவரையிலிருந்த பயத்தையும் வெட்கத்தையும் அடியுடன் துறந்து, தங்களுடைய காரியங்களை மேலும் தைரியத்துடனும் பகிரங்கமாகவும் செய்யத் துணிவார்களென்பது நாகராஜனுடைய அபிப்பிராயமாகையால், தான் அப்படியே காமாக்ஷியைத் திருத்தி நல்லமார்க்கத்திற்கு கொண்டுவர வேண்டுமானால், அவளை உடனே சென்று ஹிம்சித்து அவமானப்படுத்துவது பிசகென்றும் அவளைத் தந்திரத்தாலும் நன்றாய் மனதில் படக்கூடிய புத்திமதிகளாலுமே திருத்த வேண்டுமென்றும் தீர்மானித்தான். இவ்விதம் சிந்தனையிலாழ்ந்தவனாய் நடந்துகொண்டேயிருந்தவன் வழியில் ஓரிடத்தில் ஒரு வீட்டிற்கெதிரில் ஜனங்கள் ஏராளமாய்க் கூடியிருப்பதையும் அவர்களில் சிலர் கண்டபடி பரிஹாஸமாய்ப் பேசுவதும், உடனே மற்ற எல்லோரும் கைகொட்டிச் சிரிப்பதுமாயிருப்பதையும் கண்டு தானும் அக் கூட்டத்துடன் கலந்துகொண்டான். அவ் வீட்டிற்குள் இருவர் உரத்த குரலில் சண்டையிடும் சப்தம் கேட்டது. நாகராஜன், தன் பக்கத்திலிருந்த ஒருவரை நோக்கி, அவ் வீட்டில் என்ன சண்டை என்று விசாரிக்க அவர், அலக்ஷியமாய்,

"இக் கலியுகத்தில் வேறென்ன சண்டை? இவ் வீட்டிலிருக்கும் ராமாமிருத அய்யர் என்ற ஒருவர் தன் சம்சாரத்தைக் கண்டபடி ஹிம்சித்து சிலதினங்களுக்குமுன் வீட்டிலிருந்து துறத்திவிட்டார். அப் பெண்ணின் தகப்பனார் வந்து சண்டைபோடுகிறார்." என்று விடையளித்தார். அச்சமயம் அவ் வீட்டிற்குள்ளிருந்து,

"உனக்கென்னடா காமாட்டிப்பயலே! ஒரு பெண்டாட்டி இல்லாவிட்டால் இன்னொரு முண்டை வந்துவிடுகிறாள். எனக்கு இப் பெண் போய்விட்டால் நான் என்னடா செய்வேன்? என் குழந்தை போன இடம் தெரியவில்லையே. பெண்டாட்டியை வைத்து சரிவரக் காப்பாற்ற வழியற்ற கடிப் பயல்கள் எல்டா கல்யாணம் செய்துகொள்ளவேண்டும்?" என்று ஒருவர் அடக்க இயலாத கோபத்துடன் பேசும் சப்தம் கேட்டது. உடனே வெளியிலிருந்தவர்களில் ஒருவன்,

"ஓஹோ! இவருக்குத் தன் மாப்பிள்ளை பெண்டாட்டியை வைத்து சரிவரக் காப்பாற்ற வழியற்றவனென்பது இப்பொழுதுதான் தெரிந்ததோ? கல்யாணத்திற்குமுன் இவர் தன் காதுகளில் அரக்குமுத்திரை வைத்துக்கொண்டிருந்தார்போலிருக்கிறது." என்று பரிஹசிக்கவே, மறுபடியும் மற்ற எல்லோரும் கலகலவென்று நகைத்தனர்.

நிற்க, நம் நாகராஜன், தான் அங்கு நின்றுகொண்டு காலதாமதம் செய்வது பிசகென்று நினைத்து, அவ்விடத்தைவிட்டுச் சென்றான். கடைசியில் அவன் தன் வீட்டின் சமீபம் வந்தபொழுது, அவ் வீட்டிற்கெதிரில் டாக்டர் ராமஸ்வாமி அய்யருடைய மோட்டார் நின்றுகொண்டிருப்பதைக் கண்டதும் திடுக்கிட்டவனாய், தானில்லாத சமயத்தில் தன் தமயனுக்கு உடம்பு அதிகமாயிருக்கவேண்டுமென்று நடுங்கி, தன் வீட்டைநோக்கி ஓடினான். அவன் உள்ளே சென்றபொழுது, முன் கூடத்தில் டாக்டர் ராமஸ்வாமி அய்யரும், நாகராஜனுடைய மாமனார் கல்யாணராமய்யரும், தாழ்ந்த குரலில் பேசிக்கொண்டிருந்தனர்.



அதைக் கண்டதும் நாகராஜனுக்கு பகிரென்றது. அவனைப் பார்த்ததும் கல்யாணராமய்யர்,

"நாகராஜா! எங்கே போய்விட்டாய்? சீதாராமனுக்கு உடம்பு அதிகமாய்விட்டது." என்றார்.

நாகராஜன் மிகவும் கவலையுடன் டாக்டர் ராமஸ்வாமி அய்யரை ஏதோ கேட்கும்தருவாயிலிருந்தான். ஆனால் அவர், கல்யாணராமய்யரைக் காண்பித்து,

"எல்லாம் இவரிடம் சொல்லியிருக்கிறேன்." என்று கூறிக்கொண்டே போய்விட்டார். அவர் சென்றதும் நாகராஜன், திகிலுற்று, ஆவலுடன், கல்யாணராமய்யரை நோக்கி, டாக்டர் கூறியதென்னவென்று கேட்க, கல்யாணராமய்யர்,

"அவர் நாம் எல்லாவற்றிற்கும் தயாராயிருக்கவேண்டுமென்று சொல்லிவிட்டார்." என்று விசனத்துடன் விடையளிக்கவே, நாகராஜன் தன் தலைமேல் இடிவிழுந்தவன்போல் கொஞ்சநேரம் பிரமித்து நின்றான். பிறகு, உள்ளம் பதற, மாடிக்கு ஓடினான்.

மாடியில் சீதாராமன் ஒரு கட்டிலில் படுத்துக்கொண்டிருந்தான். அவன் பக்கத்தில் கிட்டு என்ற அவனுடைய குழந்தை விளையாடிக்கொண்டிருந்தது. ஒரு மூலையில் காமாக்ஷி தன் புருஷனை உற்றுநோக்கியவண்ணம் நின்றுகொண்டிருந்தாள். அவள், நாகராஜனைக் கண்டதும் தான் மேலும் அங்கிருப்பது முடியாத கார்யமென்று நினைத்தவள்போல், சீதாராமன் படுத்துக்கொண்டிருந்த கட்டிலை அணுகி தன் குழந்தையை அழைத்துக்கொண்டு போகுந்தருவாயிலிருந்தாள். ஆனால் சீதாராமன்,

"நீ போ; குழந்தை இருக்கட்டும்." என்று கூறவே, காமாக்ஷி முணுமுணுத்தவண்ணம் கீழே சென்றாள். பிறகு தன் தம்பியைப் பார்த்துத் தன் பக்கத்தில் உட்கார்ந்துகொள்ளும்படி சீதாராமன் ஜாடைசெய்யவே, நாகராஜன் ஆவலுடன் ஓடி பக்கத்திலுட்கார்ந்துகொண்டான். இதற்

குள் அவனுடைய கண்களில் நீர் தளும்பிக்கொண்டிருந்தது. அவன், தன் தமயன் வியாதிஸ்தனென்பதையும் மறந்து, அப்படியே அவன்மீது சாய்ந்து இறுகக் கட்டிக்கொண்டு, "ஐயோ! அண்ணா! நான் என்ன செய்வேன்?" என்று விம்மிவிம்மி அழவாரம்பிக்கவே, சீதாராமன் அளவற்ற பிரியத்துடன் அவனை அணைந்துகொண்டான். அச்சமயம் அவனுடைய நேத்திரங்களிலிருந்தும் நீர் தாரைதாரையாய் வடிந்துகொண்டிருந்தது. இவ்விதம் சகோதரர்களிருவரும் கொஞ்சநேரம் ஒருவரை மற்றொருவர் அணைந்தவண்ணமிருந்தனர். சீதாராமனுடைய குழந்தை ஒன்றும் புரியாமல் பிரமையுடன் அவர்களை உற்றுநோக்கிய வண்ணம் அழவாரம்பித்தது. உடனே, சீதாராமன், தன் தம்பியின் தலையை மெள்ளத் தூக்கி, தாழ்ந்த குரலில்,

"அப்பா! நாகராஜா! வருவது வந்தே தீரும். நீ வீணில் கவலைப்படுவதில் பிரயோஜனமில்லை. என்னுடைய காலம் சீக்கிரம் முடிந்துவிடுமென்பது எனக்கு நன்றாய்த் தெரியும். ஆகையால், நீ இப்பொழுது எனக்கு ஒரு சத்தியம் செய்துகொடுக்கவேண்டும்." என்று சொல்லிக்கொண்டே பக்கத்திலிருந்த தன் குழந்தையின் கரங்களை எடுத்து நாகராஜனுடைய கைகளில் வைத்து, "அப்பா! எக்காரணத்தாலோ உன்னைத் தவிர இக் குழந்தைக்கு வேறு கதியில்லை என்று எனக்குத் தோன்றுவதால், நீ இவனைக் கைவிடுவதில்லை என்று வாக்களிக்கவேண்டும். இன்னும் நீ இங்கு வந்தது முதற்கொண்டு அம்மாளுடன் பேசவேயில்லையென்பது எனக்குத் தெரியும். அவள் எப்படியிருந்தபோதிலும் நம்மைப் பெற்றுவளர்த்த தாயாகையால், நீ அவளைப் பிரியத்துடனும் மரியாதையுடனும் வைத்து ரக்ஷிக்கவேண்டியது உன்னுடைய கடமை." என்று கூறவே, நாகராஜன், தன் துக்கத்தின் மிகுதியால், பேசச் சக்தியின்றி, மறுபடியும் சரீம் குலுங்க அழவாரம்பித்தான். ஆனால் அவனுடைய பார்வை, "அண்ணா! நீ இவ்விதம் சத்தியம் என்னிடமிருந்து வாங்கிக்கொள்ளவேண்டியது அவசியமில்லையென்பது உனக்கே தெரியும்," என்று கூறுவதுபோலிருந்தது.



பிறகு, சகோதரர்களிருவரும் சுமார் கால்மணிநேரம் வரையில் பேசிக்கொண்டிருந்ததை இங்கு நாம் எழுதவேண்டியது அனாவசியம். அதன் முடிவில் சீதாராமன்,

"நாகராஜா! எனக்குத் தூக்கம் வருகிறது. நீ போய் சாப்பிட்டுவிட்டுவா. இந்தா; குழந்தையையும் எடுத்துக்கொண்டுபோ." என்று கூறவே, நாகராஜன் குழந்தையுடன் கீழே சென்றான்.

பிறகு சீதாராமன் தன் படுக்கையில் கொஞ்சநேரம் அப்படியும் இப்படியும் புரண்டவண்ணமிருந்தான். நடுவில் ஒரு சமயம் தன் வலது கரத்தில் ஒரு கடிதம் தட்டுப்பட்டதை உணர்ந்து, அதை எடுத்துப் பிரித்தான். அது காமாக்ஷியால் மூர்த்தி அய்யருக்கு எழுதப்பட்ட கடிதமேயொழிய வேறல்ல. நாகராஜன் அதை மூர்த்தி அய்யரிடமிருந்து வாங்கிக்கொண்டதும், அப்படியே தன் சட்டைப்பையில் வைத்துக்கொண்டான். சற்றுநேரத்திற்குமுன் சகோதரர்களிருவரும் அணைந்துகொண்டபொழுது, அக் கடிதம் அப் பையிலிருந்து நழுவி கீழே விழுந்துவிட்டது.

சீதாராமன் அக் கடிதத்தைப் பார்த்ததுமே, அது காமாக்ஷியின் கையெழுத்தென்பதை அறிந்துகொண்டு, வியப்புற்று அடக்க இயலாத ஆவலுடன் ஒருநிமிஷநேரத்திற்குள் அதை வாசித்து முடித்துவிட்டான். அச்சமயம் இருந்த அவனுடைய மனோநிலைமையை வர்ணிக்க நமக்கு சக்தியில்லை என்பதை ஒப்புக்கொள்ளுகிறோம். அக் கடிதத்தின் பின்பாகத்தை வாசித்ததும், அவனுடைய மனதில், மின்னல் தோன்றுவதுபோல், பளீர் பளீரென்று மங்களமும் மூர்த்தி அய்யரும் ஒரே படுக்கையில் கண்டுபிடிக்கப்பட்ட இரவு நடந்த சம்பவங்களெல்லாம் தோன்றலுற்றன. அன்று தன் தாயார் வழக்கத்திற்கு விரோதமாய் 9 மணிக்குள் மயங்கித் தூங்கியதும், காமாக்ஷி அவ்வளவு சிரத்தையுடன் மங்களத்துக்குக் கஞ்சி வைத்து அதைக் குடிக்கும்படி தன் நாத்தனாரைப் பலவந்தம் செய்ததும், தனக்கும் அன்றுவந்த தூக்கத்தைக் கண்டு தானே ஆச்சர்

யப்பட்டதும், பிறகு 10மணி சுமாருக்கு கீழே மங்களத்தின் குழந்தை அழும் சப்தம் கேட்டு தான் காமாக்ஷியைப் போய்ப் பார்த்துவிட்டுவரும்படி கூறியபொழுது, காமாக்ஷி தன்னையே போய்ப் பார்க்கும்படி சொன்னதும், எல்லாம் போக, அன்று தான் சாப்பிடுமுன், காமாக்ஷி ஜாடையாய்ப் பேசி மங்களத்தினிடம் தனக்கு சந்தேகத்தை உண்டுபண்ணியதும், ஒன்றின் பின் ஒன்றாய் அவனுக்கு ஞாபகம் வந்தன. இவ்விதம் கிட்டத்தட்ட 10நிமிஷநேரம் ஆலோசித்த வண்ணமிருந்தான். பிறகு, ஒருதரம் "ஹா! மங்களம்!" என்று வீரிட்டலறினான். உடனே கோபவெறியால் அவனுடைய முகம் விகாரமடைந்தது. அவனுடைய கைகள் துடித்தன. மறுவினாடி தன் பற்களை நெறநெறவென்று பயங்கரமாய்க் கடித்தான். பிறகு ஆவேசங்கொண்டவன் போல் தன் நிலைமையையும் கவனிக்காமல், "இந்த சண்டாளியை விடேன்." என்று கூவியவண்ணம், தன் படுக்கையிலிருந்து ஒரே தாவலாய்த் தாவி பூமியில் நின்றான். ஆனால் நிற்கமுடியவில்லை. அப்படியே "ஹா! மங்களம்!" என்று மறுபடியும் அலறிக்கொண்டே, பக்கத்திலிருந்த சுவற்றில் சாய்ந்தான்.

அதேசமயம், அவ்வறைக்குள் ஓடிவந்த நாகராஜன், தன் தமயனுடைய வலதுகரத்தில் இன்னுமிருந்த அக் கடிதத்தைப் பார்த்ததும், கைகால்கள் சோர்வுற்று, ஸ்தம்பித்து நின்றான். தன் தமயனுடைய கோபாவேசத்தையும் பயங்கரமான முகத்தோற்றத்தையும் கண்டதும், அவன் ஏற்கனவே அக் கடிதத்தை வாசித்துவிட்டானென்பதை அறிந்துகொண்டு, என்ன செய்வது என்று புரியாமல் தத்தளித்தான். பிறகு சீதாராமன் நிற்கமுடியாமல் ஆடுவதைக் கண்டதும், அவனைப் பிடித்துக்கொள்ளும் பொருட்டு அவனை நோக்கி ஓடினான். ஆனால் அவன் தன்னிடம் வருமுன் சீதாராமன் வெட்டுப்பட்ட மரம்போல் மடேரென்று மறுபடியும் தன் படுக்கையில் விழுந்தான்.

மறுநிமிஷம் அவனுடைய காலம் முடிந்தது.

* * *



சீதாராமன் இறந்து [illegible] மலாய்விட்டது.

அவன் இறந்தபிறகு அதுவரையில் நடந்த விஷயங்களை இங்கு சுருக்கிச் சொல்லுவோம். நாம் சொன்னதுபோல், நாகராஜன் ஓடி அவனைப் பிடித்துக்கொள்ளுமுன் சீதாராமன் மடேரென்று விழுந்ததும், அச் சப்தத்தைக் கேட்டு அவ் வீட்டிலிருந்த மற்றவர்கள் மாடிக்கு வருமுன், நாகராஜன் அவன் கையிலிருந்த காமாக்ஷியின் கடிதத்தை எடுத்து, தன் மடியில் வைத்துக்கொண்டுவிட்டான். ஆகவே, காமாக்ஷியின் சூழ்ச்சி வெளிவர நியாயமில்லாமற்போய்விட்டது. காமாக்ஷி தான் செய்த காரியம் ஒருவருக்கும் தெரியாதென்றே நினைத்துக்கொண்டிருந்தாள். ஆனால் அவ்விதம் தன் புருஷன் திடீரென்று இறந்ததும், அவள் இரண்டு மூன்று நாட்கள் வரையில் திகைப்புற்று பைத்தியம் பிடித்தவள் போல் காணப்பட்டாள். உலகில் சில பெண்மணிகள், தாங்கள்மட்டுமே தங்கள் புருஷர்களுடன் சுகமாய்க் காலங் கழிக்கவேண்டுமென்ற அபேக்ஷையினால், அப் புருஷர்களுடைய பந்துஜனங்களை தங்களுடைய வீட்டிலிருந்து துரத்தப் பிரயத்தனப்படுவதும், இன்னும் அதன்பொருட்டு அவர்கள் செய்யும் பலவித அநியாயங்களும், அதன் பலனாய் மூலாதாரமாகிய தங்கள் புருஷர்களையே இழந்து, பிறகு அவர்கள் அநுபவிக்கும் அவமானமும் எண்ணிறந்த கஷ்டங்களும் உலகமறிந்த விஷயம்.

சீதாராமன் இறந்த விஷயத்தை யறிந்ததும், அவனுடைய பந்துஜனங்களெல்லோரும் அவ் வீட்டில் வந்து கூடிக்கொண்டு, சீதாராமனுக்கு உள்ள சொத்தென்ன? அவன் சம்பாதித்ததில் மிச்சமென்ன? அவனுக்கு யார் யார் என்ன கொடுக்கவேண்டும்? என்ற விஷயங்களையெல்லாம் மிகவும் ஊக்கத்துடன் கவனிக்கலாயினர். ஆனால் அவர்கள் எவ்வளவோ பிரயத்தனப்பட்டும், சீதாராமனுக்கு அவனுடைய தந்தையால் வைக்கப்பட்ட ஐவேஜி ஒன்றுமில்லாததாலும், அவன் சம்பாதித்தது அவன் செலவிற்கே சரியாய்ப் போய்விட்டதாலும், அவனால் காமாக்ஷிக்கு வாக்கூடியது ஒன்றுமில்லையென்பதைக் கண்டனர். காமாக்ஷியின் தந்தை ஒரு

188796
சென்னை-601 008



எளிய வைதீகரா[illegible]லும் அவளை வைத்து ரக்ஷிக்க சாத்தியமில்லாமலிருந்தது. ஆகவே, அவள் நம் நாகராஜனையே நம்பவேண்டியிருந்தது. ஆனால், நாகராஜன் தன்னை எவ்வளவுதூரம் வெறுக்கிறானென்பதை அவள் நன்கறிந்தவளாகையால், தான் அவனுடனிருப்பது பிசகென்று நினைத்து, அவனிடம் போகத் தனக்கு இஷ்டமில்லையென்பதை ஜாடையாய் வெளியிட்டாள். உதாரகுணமும் பெருந்தன்மையும் நிறம்பிய நாகராஜன், அவள் அவளுடைய தந்தையுடனேயே இருக்கலாமென்று சம்மதித்து, தான் அவள் பொருட்டு மாதந்தோறும் 20ரூ. அனுப்புவதாக வாக்களித்துவிட்டு, தன் தமயன் கிருத்தியங்களெல்லாம் முடிந்ததும், சென்னைக்குச் சென்றான். அவன் அவ்விதம் காமாக்ஷி அவளுடைய தந்தையுடனிருக்க சம்மதித்ததற்கு மற்றொரு காரணமுமுண்டு. அவன், காமாக்ஷி தன் தமயனுடைய மனைவி என்ற ஒரே காரணத்தால் அவளுக்கு உதவி புரிய முன்வந்தானேயொழிய, அவள் தன் மனைவியுடனிருப்பதே ஆபத்திற்கிடமென்று பயந்தான். ஆனால் அவனுக்கு கிட்டுவை (சீதாராமனுடைய குழந்தை) காமாக்ஷியிடம் விட்டுப்போக இஷ்டமில்லை. ஆகவே, தந்திரமாய் எல்லோரும் நம்பத்தக்க சில காரணங்களை எடுத்துக்காட்டி, அக் குழந்தையை தன்னுடன் அழைத்துக்கொண்டுபோய்விட்டான். தன்னைவிட்டுத் தன் குழந்தை போய்விட்டதேயென்று காமாக்ஷி கலங்கக்கூடியவளல்லவென்பது நம் நேயர்கள் அறிந்த விஷயம்.

நாம் சொல்லும் தினம் காலை சுமார் 8 மணியிருக்கும். அச்சமயம் காமாக்ஷி அவ் வீட்டில் தனிமையாயிருந்தாள். அவளுடைய தாயார் இறந்து வெகுகாலமாய்விட்டது. ஆகவே தற்சமயம் அவளுடனிருந்தது அவளுடைய தந்தை ஒருவரே. அவர் வைதீகரென்பதை ஏற்கனவே சொல்லிவிட்டோம். அவர் தினந்தோறும் காலை 7 மணிக்கெல்லாம் வெளியே போவதும் பிறகு பிற்பகல் சுமார் 2 மணிக்குத் திரும்பிவருவதும் வழக்கம். சீதாராமன் ஏற்கனவே அவ் வீட்டிற்கு 6 மாத வாடகை கட்டியிருந்தான்.

# பாலவித்யா சந்தா விபரம்.

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு வருஷம் ஒன்றுக்கு தபாற்கூலியுள்பட ரூபா. 1—8—0

சிங்கப்பூர், பினாங், தென்னாப்பிரிக்கா, ஜாவா முதலிய வெளி நாடுகளுக்கு முன்பணம் ரூபா 2—0—0

ஜீவிய சந்தா உள்நாட்டிற்கு ரூ 15. வெளி நாட்டிற்கு ரூ 20

ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா இல்லை

"பாலவித்யா" தனி சஞ்சிகை அணா மூன்று

## சந்தாதாரர்களுக்கு முக்கிய அறிவிப்பு.

(1) சந்தாதாரர்கள் எந்தமாதத்தில் சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் ஜனவரி மாதத்திலிருந்தே கணக்கு வைக்கப்பட்டு முன் மாதத்திய சஞ்சிகைகளையெல்லாம் அனுப்புவிக்கப்படும்.

(2) நமது பத்திரிகை பிரதி இங்கிலீஷ் மீ கடைசி தேதியில் வெளிவரும். பத்திரிகை வெளியான பத்து தினங்களுக்குள், அது உங்களுக்கு வந்து சேராவிட்டால், உடனே எங்களுக்கு எழுதினால் நாங்கள் கவனிப்போம். அதற்கு மேற்பட்டால் சஞ்சிகையின் கிரயத்திற்காக மூன்று அணா தபால்பில்லை வாங்கி அனுப்பினால்தான் மறுபடியும் ஸஞ்சிகை அனுப்பப்படும்.

(3) சந்தாதாரர்கள் தமது சந்தாத் தொகையை முன்னதாக மணியார்டர் பண்ணிவிட்டால் இருபாலர்க்கும் ஸௌகர்யம். வி.பி. யில் அனுப்புவதாயிருந்தால் சந்தாதாரர்களுக்கு நான்கு அணா அதிகமாக செலவாகிறது. சிங்கப்பூர், பினாங்கு முதலிய வெளிநாடுகளுக்கு வி. பி.யில் அனுப்பமுடியாது. அவர்கள் முன்பணம் மணியார்டர் செய்தாவது பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர்கள் வாங்கியனுப்பியாவது சந்தாதாரராகச் சேரவேண்டும்.

(4) சந்தாதாரர்கள் நமக்கு கடிதம் எழுதும்போது எப்பொழுதும் சந்தா நம்பரை எழுதவேண்டும். பதில் வேண்டுவோர் ரிப்ளை கார்டாவது தபால் பில்லையாவது வைத்து அனுப்பவேண்டும்.

(5) முக்கிய குறிப்பு:—நமது ஸஞ்சிகைக்கு சிறந்த கட்டுரைகளும் அரியவியாஸங்களும் மற்றும் உள்ள அரிய நீதி ஸாரங்களும் பிரசுரிப்பதற்கு ஏற்றுக்கொள்ளப்படும். அப்படி அனுப்பப்படுபவைகளை ஸஞ்சிகை பிரசுரிக்கும் தேதிக்கு போதுமான காலம் முந்தியே அனுப்பவேண்டும்.


விளம்பர விகிதம்.

ஒரு மாதத்திற்கு, முழுப்பக்கம் ரூ 20 அரைப் பக்கம் ரூ 11.

மற்றபடி நீண்டகால விளம்பரத்திற்கு எங்கள் ஆபீஸுக்கு எழுதவும்.


பாலவித்யா ஆபீஸ்,

நெ. 5, கீழ அய்யன் தெரு, ஸ்ரீவித்யா பிரஸ், கும்பகோணம்


Printed and Published by N. Venkataraman,
at the Sri Vidya Press, Kumbakonam.